# இறையியல் கோலங்கள்

காலாண்டு வெளியீடு

# IRAI — IYAL KOLANGAL

Tamil Theological Quarterly


வடிவம் : 12

வண்ணம் : 02

ஆடி : 1999



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்புத்துறை

யாழ்ப்பாணம்

இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்

அருட்திரு ஜே. நீக்கிலஸ்

துணை ஆசிரியர்கள் :

அருட்திரு ச. வி. ப. மங்களராஜா
அருட்சகோ. செ. வசந்தகுமார்
அருட்சகோ. செ. எ. றொஷான்
அருட்சகோ. சி. லியோ ஆம்ஸ்ரோங்
அருட்சகோ தே. ரவிராஜ்

விநியோகம் :

அருட்சகோ. செ. றோய் பேடினன்ட்
அருட்சகோ. ம. பத்திநாதர்

வெளியீடு :

புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
( தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும் )

EDITOR :

***REV FR J. NICHOLAS***

SUB EDITORS :

***REV. FR. S. V. B. MANGALARAJAH***
***BRO. S. VASANTHAKUMAR***
***BRO. S. A. ROSHAN***
***BRO. S. LEO ARMSTRONG***
***BRO T. RAVIRAJAH***

DISTRIBUTION :

***BRO. S. ROY FERDINAND***
***BRO. M. PATHINATHAR***

PUBLICATION :

***ST. FRANCIS XAVIER'S SEMINARY***
***COLUMBUTHURAI,***
***JAFFNA,***
***SRI LANKA.***
( ***For private ciruculation only*** )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

★ ஆசிரியர் உரை

1. பொது நிலையினரின் ஆன்மீகம் — 1
மறை ஆசிரியர் சு. அந்தோனிப்பிள்ளை

2. மனச்சாட்சி உருவாக்கத்தின் அவசியம் — 11
அருள்திரு M. டேவிட்

3. திருச்சபையில் வேதாகமம் — 20
அருள்திரு மைக்கல் சௌந்தரநாயகம்

4. ஆண்டவரின் நாள் — 28
அருள்திரு S. B. V. மங்களராஜா

5. Synopsis — 42



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

(ஆசிரியர் உரை)

திருச்சபையிலே எல்லோரும் புனிதவாழ்வுக்கு அழைக்கப் பட்டவர்கள். குருக்கள், துறவியர் மட்டுமல்ல பொதுநிலை யினரும் தம் வாழ்வின் நிலைக்கு ஏற்ப ஆன்மீகத் தேட லிலே ஈடுபடவேண்டியவர்கள். பழைய ஏற்பாட்டிலே பல பொது நிலையினர் ஆன்மீகத் தேடலை மேற்கொண்டனர். அவ்வாறே புதிய ஏற்பாட்டிலும் பலர் முன்னுதாரணமாய்த் திகழ்கின்றனர்.

ஆன்மீகத் தேடல் புனிதத்தன்மையின் பாதையாகும். மனச்சாட்சியுடன் வாழ்வது புனிதத்தன்மையின் ஒரு அறி குறியாகும். ஆனால் மனச்சாட்சி பக்குவமாய் உருவாக்கப் பட வேண்டியதொன்றாகும். மனச்சாட்சி என்பது இறை வனின் குரல். அவரது குரலுக்கு செவிமடுப்பது ஆன்மீகத் தேடலின் முதற்படியாகும்.

இறைவனின் வார்த்தை உயிருள்ளது, ஆற்றல்மிக் கது. உள்ளத்தின் ஆழத்தை ஊடுருவிச் செல்ல வல்லது. இறைவனின் அழைப்பின் குரலுக்கு செவிமடுத்து மனந் திரும்புவது புனித வாழ்வுக்கு இன்றியமையாதது. இறை வார்த்தை ஆன்மீகத் தேடலிலே ஒரு புதையலாக திகழ் கின்றது.

ஞாயிறு தினம் ஆண்டவரின் புனித நாள். கிறிஸ் தவ வாழ்வைப் புனிதப்படுத்த திருச்சபையால் தரப்பட் டுள்ள ஓர் சிறந்த நாள். இந்த நாளின் முக்கியத்து வத்தை வலியுறுத்தி ஓர் அப்போஸ்தலிக்க மடலை எழுதி யுள்ளார் நம் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர். இவ்விதழில் தரப்பட்டுள்ள ஆக்கங்கள் எமது வாசக அன்பர்களுக்கு நற்பயனளிக்கும் என்பது எம் நம்பிக்கை யாகும்.

அருள்திரு. ஜே. நீக்கிலஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநிலையினரின் ஆன்மீகம்

சு. அந்தோனிப்பிள்ளை
(மறை ஆசிரியர்)

## விவிலிய நோக்கில் ஆன்மீகம்:

### குலமுதுவர் காட்டிய ஆன்மீகம் :

பலவிதமான வசதிகள், வாய்ப்புகள், வளங்கள் கொண்ட செழும்பிறைப் பள்ளத்தாக்கில் 'ஊர்' என்ற இடத்தில் வாழ்ந்த ஆபிரகாம் அந்நகரம் போரினால் வீழ்ச்சி அடைந்தபோது தந்தையுடனும், சகோதரன் மகன் லோத்துடனும் ஆரானிற்குப் புலம் பெயர்ந்து வந்தபோது அங்கே தந்தையை இழக்கின்றார். அங்கேதான் பலவிதமான தெய்வ வழிபாடுகள், கலாச்சாரங்கள், பண்பாடுகள், பழக்க வழக்கங்களைக் கொண்ட ஆபிரகாமை இறைவன் அழைக்கின்றார்.

இறை அழைப்பை தனக்குள் உணர்ந்து கண்டு கொண்டவர் உடனே கீழ்ப்படிகின்றார். தொடர்ந்து அவர் வாழ்வில் ஏற்பட்ட அத்தனை நெருக்கடிகளிலும் இறை விருப்பை நிறைவேற்றுபவராகவே காணப்படுகின்றார்.

ஆபிரகாமுக்கு 99 வயதில் இன்னும் பிள்ளையற்ற நிலையில் இருந்தவர்க்கு பிள்ளை ஒன்று பிறக்கும் என்று இறைவன் எடுத்துக் கூறியபோது மறுப்புத் தெரிவிக்காமல் விசுவசித்தார். இந்த விசுவாசத்தின் உச்சக் கட்டம் தனது ஒரே மகனையே இறைவனுக்குப் பலியிட முன்வந்துள்ளமை, இறைவன்மேல் ஆபிரகாம் காட்டிய பிரமாணிக்கத்தை எமக்குத் தெளிவுற எடுத்துக்காட்டுகின்றது. எவ்வளவு நிறைவான சொத்துக்கள் அவரிடம் இருந்தாலும் இறைமதிப்பீடுகளின்படி வாழ்வதிலேயே முழுமூச்சுடன் செயற்பட்டார்.

அன்பு, இரக்கம், மன்னிப்பு, தியாகம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பகிர்தல், ஏற்றுக்கொள்ளுதல், நீதி, உண்மை, பற்றற்ற வாழ்வு போன்ற உயர்ந்த பெருந்தன்மையுள்ள பண்புகளுடன் அவர் வாழ்ந்ததை அவரது வாழ்வில் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையை ஈசாக்குடன் இறைவன் புதுப்பித்தபோது, அவரும் தந்தைக்கேற்ற தனையனாய் இறைவிருப்பை நிறைவேற்றுவதைய் ஈசாக்கின் வாழ்விலும் காணக்கூடியதாய் உள்ளது. யாக்கோப்பின் வாழ்வில் மிகவும் மெச்சத்தக்க உன்னதமான சம்பவம், யாக்கோபு ஆற்றங்கரையில் இனந்தெரியாத ஆடவனுடன் போராடிய நிகழ்வேயாகும். செபம் என்பது ஒரு போராட்ட அனுபவம். பொழுது புலருமட்டும் செபத்திலே, தியானத்திலே தன்னை ஒருமுகப் படுத்தி தான் யார் என்று கண்டுகொள்கின்றார். இதுவரை செய்த குற்றங்களுக்கெல்லாம் இறைவனிடம் மன்னிப்புப் பெற்று, இறைபிரசன்னத்துக்குள் தன்னைபிரசன்னமாக்குகின்றார். அதனால் இஸ்ராயேல் என்ற சிறப்புப் பெயரைப் பெறுகின்றார். இறைவனால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இதுவே குலமுதுவர் யாக்கோப்பின்' ஆன்மீகமாக மலர்கின்றது.

தொடர்ந்து சூசையின் வரலாறு முழுவதையும் தொகுத்து நோக்கினால் நாம் காண்பது என்ன? சூசையின் வாழ்வில் ஒவ்வொரு கட்டங்களிலும் 'ஆண்டவர் அவருடன் இருந்தார்' என்பதையே அவதானிக்கக் கூடியதாயிருக்கின்றது. எல்லாவற்றிலும் ஆண்டவர் சூசையுடன் இருக்கக் காரணம்...? இறைவனையே சூசை தன் வாழ்வில் முதன்மைப்படுத்தி வாழ்ந்தார். இதுவே சூசையின் ஆன்மீகமாக ஏற்றம் பெற்றது. ஆபிரகாம் இறைவனுக்கு, கீழ்ப்படிதல், விசுவாசம்' பிரமாணிக்கம் ஆகிய பண்புகளுடன் உகந்தவராக வாழ்ந்தாரோ அதே போல் அவர் பிள்ளைகளாகிய ஈசாக், யாக்கோபு, சூசை போன்றவர்களும் ஆன்மீகத்தில் ஆற்றலுடன் செயற்படுவதை அவர்கள் வரலாற்றில் காண்கின்றோம்.

## விடுதலை பெற்ற மக்களின் ஆன்மீகம்

இன்று நம் நாட்டில் நிலவுகின்ற அடிமைத்தனங்கள், ஒடுக்குமுறைகள், போர், வன்செயல்கள், இன அழிப்புகள் போன்று பழைய ஏற்பாட்டிலும் இஸ்ராயேல் மக்களைப் பெரிதும் பாதித்தன, எகிப்திய மன்னன் பாரவோனால் அவர்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டார்கள், யாவே கடவுளை நோக்கிக் கூக்குரல் எழுப்பினார்கள். யாவே தம் மக்களது கூக்குரலைக் கேட்டார். அவர்கள் அனுபவித்த அவலங்களைப் பார்த்தார். அவர்களது உண்மை நிலையை அறிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கமான முடிவோடு மோயீசன் வழியாக அம் மக்களை எல்லாவித அடிமைத்தனங்களிலிருந்தும் விடுவித்தார். (வி. ப. 3 ; 7-23). இவ்வாறு விடுவிக்கப்பட்ட மக்கள், சுரண்டலுக்கு எதிராக நியாயத் தோடும் ஏற்றத் தாழ்வுகளுக்கெதிராக சமத்துவத்தோடும் வாழ வேண்டும் என்று இறைவன் விரும்பினார். (வி. ப. 22 : 21-27, லேவி 25). இது விடுதலைபெற்ற மக்களின் ஆன்மீகமாக மலர்ந்தது.

## உடன்படிக்கை தந்த உன்னத ஆன்மீகம்

அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்று மோயீசன் தலைமையில் விடுவிக்கப்பட்ட மக்கள், செங்கடலைக் கடந்து சீனாய் மலையில் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள், என்ற நிலைக்கு உயர்வு பெறுகின்றார்கள். இறைவன் இஸ்ராயேல் மக்களோடு உடன்படிக்கை செய்கின்றார். "நான் உங்கள் தேவன், நீங்கள் என்னுடைய மக்கள்". இதுவே உடன்படிக்கையின் உட்பொருள். உடன்படிக்கை ஒன்று என்றால் நிபந்தனையும் அதனுள் அடங்கியிருக்கும். அதுவே இறைவன் தந்த பத்துக் கட்டளைகள். "நீங்கள் என் வார்த்தைக்குச் செவி சாய்த்து என் உடன்படிக்கையைக் கடைப்பிடித்தால் ..........." (வி. ப. 19 ; 5-6)

மோயீசன் ஆண்டவர் கூறிய வார்த்தைகளை இஸ்ராயேல் மக்களிடம் தெரியப்படுத்தியபோது மக்கள் அனைவரும் ஒரே குரலாக 'ஆண்டவர் கூறிபடியே அனைத்தும் செய்வோம்'' (வி. ப. 19:8). என்று மறுமொழி கூறினர். இந்த உடன்படிக்கை அனுபவம்தான் விடுதலை பெற்ற இஸ்ராயேல் மக்களின் ஆன்மீகமாக அவர்களிடையே புரையோடி, இறைமையமாகத் தம் வாழ்வை அமைத்துக்கொள்ளக் காரணியாக அமைந்தது.

## இறைவாக்கினர்கள் ஏற்படுத்த முயன்ற ஆன்மீகம்:-

உடன்படிக்கையை இஸ்ராயேல் மக்கள் மறந்து வாழ்ந்து இன்னல்கள் பல அனுபவித்த வேளைகளிலெல்லாம் அவர்களைத் தட்டிக் கொடுத்து இறை உறவை மீளவும் அவர்கள் மையப்படுத்தி வாழ ஊக்குவிக்க, இறைவன் - யாவே இறைவாக்கினர்களை அவர்கள் மத்தியில் அனுப்புகிறார். மன்னன் கொதித்தெழுந்தாலென்ன, மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊார்ந்தெழுந்தாலென்ன கனிவிரக்கத்துடன் அவர்களை அணைத்துக் கொள்ளவே யாவே – இறைவன் விரும்புகின்றார். இஸ்ராயேல் குழந்தையாய் இருந்தபோது அவன் மேல் அன்புகூர்ந்தேன்: எகிப்திலிருந்து என் மகனை அழைத்து வந்தேன்...... (ஓசே. 11 : 1 – 9) இவ் வார்த்தைகள் இறைவாக்கினர் ஓசேயா மூலம் இறைவன் கூறிய அமுத மொழிகள்.

ஓசேயா தனது எடுத்துக்காட்டான வாழ்வின் மூலம் இவ் உண்மையை அம் மக்களுக்குப் படம்பிடித்துக்காட்டி இறை உறவின் அனுபவத்திலே அவர்கள் ஆன்மீகத்தை மலரச்செய்ய பெரும் முயற்சி செய்கின்றார்.

''இதோ நாட்கள் வருகின்றன. அப்போது நான் இஸ்ராயேல் வீட்டாரோடும், யூதா வீட்டாரோடும் புதிய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வேன்......'' (எரேமியா 31 : 31 - 34) என்னும் இவ்வார்த்தைகள் உடன்படிக்கை அனுபவத்தை மறந்து, தமது ஆன்மீகத்தைக் குழிதோண்டிப் புதைத்து, தம் மனம்போன போக்கிலே வாழ்ந்த இஸ்ராயேலரை மறுபடியும் இறை, அனுபவத்திற்குள் கொணர, இறைவாக்கினர் எரேமியாஸ் மூலம் இறைவன் எடுக்கும் பெரு முயற்சியாகும்.

## ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்வில் இயேசுவின் ஆன்மீகம்

புதிய ஏற்பாட்டில் இயேசு, யாவே–கடவுளுடைய செயற்பாடுகளை, விடுதலை உணர்வுகளை, மதிப்பீடுகளை, மனநிலைகளை தனதாக யோர்தானில் பெற்ற திருமுழுக்கில் ஏற்றுக் கொண்டார். இவ்வாறு பழைய ஏற்பாட்டில் விண்ணகத் தந்தையை, அவரின் செயலை புதிய ஏற்பாட்டில் மண்ணக மக்களிடையே பிரதிபலித்து பிரசன்னப்படுத்தி வாழ்ந்தார் இயேசு. தமது பணிவாழ்வின் அர்த்தத்தை, அதன் கொள்கை விளக்கத்தை நாசரேத்தூர் செபக்கூடத்தில் அவரிடம் கொடுக்கப்பட்ட ஏட்டுச்சுருளில் இருந்து படித்துக்காட்டி விளக்கமும் தருகின்றார் (லூக். 4 : 18 - 19). இக்கொள்கை விளக்கத்தை அன்றைய ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நற்செய்தியாகப் போதித்தார். இதுவே அன்றைய இயேசுவின் போதனையை ஏற்றுக் கொண்ட மக்களின் ஆன்மீகமாக உருவெடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புப் பணியிலே ஆன்மீகம் ஊற்றெடுக்கும்:-

"முடிவில்லா வாழ்வு பெற நான் என்ன செய்யவேண்டும்?" என சட்ட வல்லுனன் இயேசுவைச் சோதிப்பதற்காகக் கேட்ட கேள்விக்குத் தக்க பதிலை அவனிடமிருந்தே பெற்று விடுகின்றார் இயேசு. இறைவன்பால் செலுத்தும் அன்பு, அயலவர்மேல் செலுத்தும் அன்பாக மலர வேண்டும். இரண்டும் சேர்ந்த அன்பு நிலையே உண்மையான இறை வழிபாடாகும் என்பதை "இப்படியே செய்யும் வாழ்வு பெறுவீர்" என்று சட்டவல்லுனனுக்கு உணர்த்தியபோது, அவன் தனது தோல்வியை ஏற்க மறுத்து தான் கேட்டது சரிதான் என்று காட்ட முயலுகின்றான். "எனது அயலான் யார்?" எப்படி அறிவது? எனக் கேட்கிறான். இயேசு சமாரியனின் உவமையைக் கூறி, அதன் மூலம் என் அயலான் யார்? என்று நீ தேடாதே, யாருக்கு நான் அயலான்? எங்கெல்லாம் அன்புப்பணி ஆற்றப்படுகின்றதோ, அங்கெல்லாம் இறையரசு வந்துவிட்டது. அங்குதான் உண்மையான ஆன்மீகம் ஊற்றெடுக்கின்றது என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லி விளங்க வைக்கின்றார் இயேசு.

## அன்றாட வாழ்வின் சவால்கள்

பொதுநிலையினராகிய நாம் எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் ஒரு வரையறைக்குட்பட்ட வாழ்க்கைக்குள் நிர்ப்பந்திக்கத் தள்ளப் பட்டதுபோல் எம்மில் பலர் சிந்திக்கலாம். பொழுது புலர்கின்றது. ஒவ்வொருவருக்கும் அவரவர்க்குரிய கடமைகள் காத்துக்கிடக்கின்றன. பெற்றோருடைய கடமைகள், பொறுப்புக்கள், பிள்ளைகளது கடமைகள் பொறுப்புக்கள் என்று பரந்து விரிந்து கொண்டே போகின்றது. மாலையில் எல்லோரும் ஒன்று கூடுகின்றனர். அந்த நாளில் அவரவர்களுடைய தேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையிலா ஒன்று கூடுகின்றனர்? என்னென்ன ஏக்கங்கள், தாக்கங்கள் நிறைவுசெய்யப் படாமல் தேங்கி நிற்கின்றன...? நாம் என்ன பிரச்சினைகளுக்கு அன்றாட வாழ்விலே முகம் கொடுக்க வேண்டியுள்ளது...? என்பவை யெல்லாம் பொது நிலையினரின் ஆன்மீகத்தை அலசிப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி என்பதை நாம் மறக்கலாகாது. அதே வேளையில் பொதுநிலையினராகிய நாம் அன்றாடம் செய்யவேண்டிய கடமைகள் எமக்குள்ள பொறுப்புக்கள் யாவும், இறைவனிடமிருந்து நாம் பெற்ற அழைப்பிலேதான் தங்கியுள்ளது என்பதை மட்டும் மறந்துவிடக் கூடாது. இதைவிட்டு நாம் தப்பி ஓடவும் முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வாழ்வின் முரண்பாடுகள்

ஆனால் நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்...? எமது செயற்பாடுகள் தரும் அர்த்தங்கள்தான் என்ன? எமது வழிபாடுகளின் அர்த்தம் எமக்குப் புரிகின்றனவா? எமது வழிபாடுகள் எப்படி அமைகின்றன? நாம் எதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம்? எமது சிந்தனாசக்திகளை ஒருமுகப்படுத்தி, உலகியல் பார்வையில் உள்விழுத்தி, உலகியலையே பூஜித்தவர்களாக வாழ்ந்தும், வாழவும் முற்படுகின்றோம். ஆனால் நாம் எம்மை அறிய, ஆராய நேரங்களை ஒதுக்குகின்றோமா? மாறாக எம் உடன்பிறப்பான உணர்வலைகளை நாம் நெறிப்படுத்தாமல் எமது போக்கிலே சென்று அலையவிட்டு, எம்மையே நாம் ஏமாற்றிக்கொண்டும் பிறரை ஏமாற்றிக்கொண்டும் வாழ்வதில் நாம் மகிழ்ச்சிப் பெருக்கு அடைவதில்லையா...?, பொய் முகமூடிகளை அணிந்து கொண்டு, பெயரளவில் கிறிஸ்தவனாக நம்பிக்கையற்ற வாழ்வை வாழ்ந்து கொண்டும் பயங்கரப்படுகுழியில் விழுவதை நாம் கவனத்தில் எடுப்பதில்லை. காரணம்! நாம் எம்மை அறிய முனைவதில்லை.

"உன்னை அறிந்தால், உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்.
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலைவணங்காமல்
நீ வாழலாம் என்று"

பாடினான் ஒரு கவிஞன்.

"உன்னையே நீ அறிவாய்" என்றார் தத்துவ மேதை சோக்கிரட்டீஸ். பிறருடைய வாழ்வில் இரண்டறக் கலந்து கொள்வதே எமது பரம திருப்தி, அதுவே ஆன்மீகமாக உயர்வுபெறுகின்றது என்று சொல்லிக்கொள்ளும் நம்மிடம் விஞ்சி நிற்பது சுயநலமா...? அன்றேல் சுயமாகச் சிந்திப்பதன் மறுவிளைவா...?

## மலர்வும் உயர்வும் மனிதனின் சிந்தனையில்

யோக மார்க்கத்தைக் கடைப்பிடித்து ஒருவன் யோகியாகின்றான். மிதமின்றி உண்டு, குடித்து, உலக ஆசைகளுக்கு அடிமைப்பட்டு மற்றவன் போகியாகின்றான். எமது ஆழமான சிந்தனைகள், எண்ணங்களில்தான் எமது வாழ்வின் மலர்வு, உயர்வு பெறுகின்றது. பூவானது முதலில் மொட்டாகின்றது, இடையில் அசம்பாவிதங்கள் ஏதும் இல்லாவிடில் அது மலரும். உயர்ந்த சிந்தனைகள் உயர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களில் வெளிப்படுகின்றது. உயர்ந்த சொற்களென்றால் நிறைந்த ஆழமான வார்த்தைகள், மகிழ்ச்சியளிக்கக் கூடிய வார்த்தைகள்... ஒரு தாய் தன் மகனைப் பார்த்து 'வாடா' என்று சொல்கிறாள். அவ்விடத்தில் வார்த்தை உயர்ந்த நிலையிலுள்ளது. நாம் ஒருவரைப் பார்த்து 'வாடா' என்றால் உறவில் முறிவு ஏற்படும். பரிவுடன் கூப்பிடும்போது, அணுகும்போது, எண்ணங்கள், சொற்கள் மிகவும் அவசியமாகின்றது. இவைகளில்தான் எமது உயர்வு... நீ எவ்வாறு நடந்து கொள்ளுகின்றாய்? உனது சொற்களின் அதிர்வுஎப்படி? அதுதான் உனது உயர்வும், மலர்வும். இன்னின்ன குணங்கள் உள்ளவன் நல்லவன், இன்னின்ன குணங்கள் உள்ளவன் கெட்டவன் என்ற வரைவிலக்கணமும் உண்டு. நான் பேசுவது தான் வாழ்வு எனில், நல்ல எண்ணத்தோடு வாழ்! உன்னுடைய வார்த்தைகள் தான் உனது விரோதி. எனவே நாம் எமது எண்ணங்களும், வார்த்தைகளும் தான் எமது வாழ்வின் பிரகாசம் என்பதை உணர்வோமானால் அதில் தூய்மைதான் மிகப் பிரதானம் என்பதையும் மறக்கமாட்டோம்.

## ஆன்மீகம் என்பது தெய்வீகநெறி:-

ஆன்மீகம் என்பதை ஒரு வரவிலக்கணத்திற்குள் புகுத்த முடியாது. என்றாலும் ஓரளவு சொல்லப்போனால், ஆன்மீகம் என்பது தெய்வீக நெறி. தெய்வீகக் கலாசாரம், பண்பாடு. இயற்கைக்கு ஒவ்வாத சிந்தனைகள் மனிதனை அழித்து விடுகின்றன. பிறரையும் அழித்து விடுகின்றன. உ—ம். பொறாமை, விபரீதமான உணர்வுகள், குரோதம், வஞ்சகம், ஆணவம் போன்றவைகள், ஏனெனில் இயற்கைக்குப் புறம்பான மனிதன் எதையும் சிந்தித்துச் சாதிக்க இயலாது. அப்படி ஒரு மனிதன் இருந்தால் அவன் தூக்கி எறியப் படுவான். தன் மனித வாழ்வில் அவனால் எதையும் சாதித்துவிட முடியாது. தனது ஆன்மீகத்தில் வளர்ச்சிபெற இயலாது. விரக்தியுற்று சோர்வுற்று நாளுக்கு நாள் தன்னையே அழித்துக்கொண்டிருப்பான், உலகை, மாத்திரம் நம்பியவனுக்கு உணர்வலைகள்கூட படிப்படியாகச் செயற்பட மறுப்புத் தெரிவிக்கும்.

எனவே ஆன்மீகத்தை நாம் எமக்குத் தெரிந்த வகையில் நல்ல முறையில் எம்மில் வளர்த்துக் கொள்கின்றோம், வாழ்கின்றோம் என்றால் அது எப்போதும் எமது உள்ளத்திலே மலர்ச்சியை, நிறை மகிழ்ச்சியைத் தந்துகொண்டிருக்கின்றதா? என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். ஆன்மீகம் என்று சொல்லிக்கொண்டு அறியாமையில் வாழ்கின்றோமா என்பதையும் உள்ளூர உணர்ந்துகொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருக்கத் தெரிந்தவன் எல்லாம் தெரிந்தவன்:-

பொதுநிலையினரின் ஆன்மீகம் என்று குறிப்பிட்டுக் கூறுவேன். ஏன் ஒவ்வொருவரின் ஆன்மீகமும் உயர்வு பெறுவது அவரவருடைய இருக்கையில்தான் தங்கியுள்ளது.

"இருக்க இருக்க இருக்கை தெளியும்,
இருக்கை தெளிய இருப்பலை கைகூடும்".

ஒவ்வொருவரும் தன்னைப் பற்றி அறிய, தனது உள்ளார்ந்த பெலவீனமான விபரீதங்களை அழித்தொழிக்க, அமைதிநிலை, மகிழ்ச்சிநிலை, நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள, ஓர் இடத்தில் அமைதியாக சமநிலையாக இருக்கப் பழக வேண்டும். இதற்கு அவன் ஒரு சில யோக மார்க்கங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். யோக மார்க்கத்தில் எட்டுப்படிகள் உண்டு. இயமம், நியமம், ஆசனம், பிராணாயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகியன.

இயமம் — யாருக்கும் இம்சை புரியாமை, சத்தியம் கடைப்பிடித்தல், களவு செய்யாமை, புலன்களையடக்குதல், பொருளாசையின்றி வாழ்தல்.

நியமம் — தூய்மை (உடல், உள்ள) திருப்தி, விரதங்களை மேற்கொள்ளல், வேதபாராயணம், இறைவனிடத்தில் தன்னை ஒப்படைத்தல்.

ஆசனம் — தியானத்திற்கும், உடல் தூய்மைக்கும் உட்காரும் முறை.

பிராணாயாமம் — ஜீவசக்தியை ஒழுங்காக நடாத்துதல்

பிரத்தியாகாரம் — மனதைப் பிறபொருளில் செல்லவொட்டாது தடுத்து நிறுத்துதல்.

தாரணை — மனதை ஒருவழிப்படுத்தல்.

தியானம் — ஒன்றையே சிந்தித்தல்

சமாதி — நனவு நிலைக்கு அதீதமான நித்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் முதல் மூன்றையென்றாலும் ஒருவன் சரிவரச் செய்து சமநிலையாக சரியான முறையில் நிமிர்ந்து வச்சிராசனத்திலோ வீராசாசனத்திலோ, சுகாசனத்திலோ, பத்மாசனத்திலோ இருந்து நாசியின் நுனியை நோக்கிப் பார்வையைச் செலுத்தி மனதை அலையாமல் நிலை நிறுத்தி, சுவாசத்தை உள்ளிழுத்து, வெளிவிட்டு இருப்பதற்கு பயிற்சிபெறுவானாக. அப்படி இருப்பின் அவன் மனம் அடங்கும், ஒரு நிலைப்படும். மன அமைதி, மகிழ்ச்சியுண்டாகும். காரணம் அவனுக்குள் இருக்கும், இயங்கும் ஊர் ஆசைகள், இயற்கைக்கு ஒவ்வாத உணர்வுகள் அவனை விட்டு நீங்கும். அதுதான் இருக்க இருக்க இருக்கை உறுதியாகும். இருக்கை தெளிய உறுதியாக அவனுள் இருக்கும் இயற்கைக்கு ஒவ்வாத மனப்பீடைகள் அழிந்து ஒழிந்து ஆன்மீகம் அதீத உயர்ச்சியும், மலர்ச்சியும் பெறும். தன்னை யார் என்று அவன் முழுமையாக இனம் காணுவான். தனிமனித வாழ்விலோ, குடும்ப வாழ்விலோ, சமூக, சமுதாய வாழ்விலோ அவனது வாழ்வு, மிகவும் மெச்சக்கூடியதாக எடுத்துக்காட்டான வாழ்வாக அமையும்.

மிகவும் முக்கியமும் அவசியமுமானது! நிறைவுள்ள சிந்தனைகளும், தெளிவான உயர்ந்த கருத்துக்களும் நிரம்பப் பெற்றவனாக எந்நேரமும் இவைகளைவிட்டுப் பிரியாதவனாக இருக்க வேண்டும், என்ற ஆவலேயாகும். எனக்கு என்ன குறை? ஒரு குறையுமில்லை இதைப் புரியாததுதான் பெரிய குறை. இவ்வளவு காலமும் இதைக் கண்டு கொண்டோமா? காரணம் நிறைவான எண்ணங்களோடு வாழவில்லை. ஆன்மீகம் என்பது இன்னும் ஒரு நோக்கில் பார்த்தால் நெறிப்படுத்தப்பட்ட ஒரு வாழ்வு. எம்மத்தியில் உள்ள தூய கிறிஸ்துவின் இராச்சியத்தை அனுபவிக்க நாம் தகுதியா? இல்லை. காரணம் உலகுடன் ஒட்டிய வாழ்வில்தானே மூழ்கியிருக்கின்றோம். நாம் எல்லாம் சில சமயங்களில், 'சிரித்தவர்கள் எல்லாம் நண்பர்கள் என்றும் வெளுத்தவைகள் எல்லாம் பால்' என்றும் எண்ணி ஏமாறுபவர்கள் தானே.

எனவே பொருள்களின் புறத்தோற்றத்தைக் கண்டு ஏமாறாதே! ஆன்ம சுடேற்றத்திற்குரிய சிந்தனைகள், தருணங்கள் எமக்கு வாய்ப்பது மிகவும் அரிது. மிகுந்த கவனத்துடன் இருந்தாலேயன்றி அச் சத்தம் மோனத்துள் எழும்போது புலன்வழியே நம் எண்ணங்களைக் கலையவிட்டுக்கொண்டிருக்கும் நமக்கு அது கேட்காது. அந்நிலை எம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து அடையாமல் இருக்கவே, எமக்கு அழிவைக் கொண்டுவரும் பழக்கங்கள் எம்மை வந்து சூழ்ந்து எமைக் கைப்பற்றும். இந்நிலை எம்மில் ஏற்படா வண்ணம் காத்துக்கொள்ள நாம் 'சித்து' என்பதை எப்போதும் நினைவில் இருத்திக்கொள்வோம். உலக்குப் பின்னால் வல்லமையிருக்கின்றது.

## பொதுநிலையினரின் ஆன்மீகம் புத்தூக்கம் பெற:-

''நாங்கள் காண்பவற்றையல்ல, காணாதவற்றை நோக்கியே வாழ்கின்றோம். காண்பவை நிலையற்றவை; காணாதவை என்றென்றும் நிலைத்திருப்பவை'' (2 கொரி. 4; 18)

எனவே எப்போதும் தூய்மையும், நேர்மையும் கொண்டவர்களாக வாழப் பழகிக் கொள்வோம். எமக்கு நாமே எப்பொழுதும் உண்மையுள்ளவர்களாக இருக்கப் பார்த்துக்கொள்வோம். ஆகவே பொதுநிலையினராகிய நாம் எமது ஆன்மீகத்தை வளப்படுத்திக் கொள்ள, நாம் வாழும் எந்தச் சூழ்நிலையிலும் நாம் யார்? என்பதை நினைவில் நிலைக்கச் செய்வோம். இருக்கத் தெரிந்தவன் எல்லாம் தெரிந்தவன்' என்பதை உளத் தூய்மையுடன் சிந்தித்து எம் வாழ்வை ஆன்மாவின் செயற்பாடுகளுக்கு உட்படுத்துவோமாயின் எல்லையில்லா மகிழ்ச்சிக் கடலில் எப்போதுமே மூழ்கி எழும் பெரும்பேற்றை அடைவோம்.

எமது இதயத்தில் இறைவனை எந்நேரமும் பூஜிக்க வேண்டும். இல்லற வாழ்வை எனது புனித பணியாக, நாம் பெற்ற புனித அழைப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும், உலகில் நாம் செய்யும் பணி எதுவாக இருப்பினும், கிறிஸ்துவின் குருத்துவப் பணியில் பங்கெடுக்கின்றோம் என்பதை மனத்திலிருத்தல் வேண்டும். நாம் எதிர்நோக்கும் அக-புற நிலை சவால்களை கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளின் பின்னணியில் சிந்திக்கத் தொடங்கவேண்டும். உயிர்ப்பும், மறுவாழ்வும் எம்மை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது என்பதை இடைவிடாது மனத்திலிருத்தி மகிழ்வுடனும், மலர்ச்சியுடனும் வாழ பயிற்சியும், முயற்சியும் எடுப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச்சாட்சி உருவாக்கத்தின் அவசியம்

அருள்திரு M. டேவிற்

"ஆற்றங்கரையின் ஓரத்திலே" (The River's edge) என்ற ஆங்கிலத் திரைப்படம் தற்கால ஒழுக்கவியல் சார் வளர்ச்சியையும், அதன் வெளிக்கொணர்தல் பற்றியும் மிகத் துல்லியமாக காட்டுகின்றது. இத்திரைப்படத்தில் ஒரு மாணவன் கட்டிளம் பருவமுடையவன், தன் நண்பி ஒருத்தியை ஒரு ஆற்றங்கரை ஓரத்தில் கொன்றுபோடுகின்றான். பின் பாடசாலைக்கு சென்று தன் நண்பர்களுக்கு நடந்தது பற்றிக் கூறி தற்புகழ்ச்சியும் கொள்கின்றான். நன்பர்கள் பலரும் ஆற்றங் கரைக்கு சென்று கொலையுண்ட பெண்ணின் உடலைப் பார்க்கின் றார்கள், மீண்டும்தம் இல்லமேகி தம் கருமம் தொடர்கின்றார்கள்.

இந்தப் படத்தின் ஆசிரியர் மிக நுட்பமாக வெளிப்படுத்தும் செய்தி, படத்தின் கரு என்னவென்றால், அந்தக் கொலை செய்த மாணவனோ, அல்லது அவனது நண்பர்களோ அந்த நிகழ்வை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை, அதைப்பற்றி தம் பெற்றோரிடமோ அல்லது ஆசிரியரிடமோ கூறவில்லை. அது ஒரு சர்வசாதாரண நிகழ்ச்சி அமைகின்றது. இப்படித்தான் எங்கள் சூழலில் நடைபெறுகின்ற போல்வன் செயல்கள் எங்கள் ஒழுக்கவியல்சார் கூர்ந்தறி திறனை (Moral Sensitivtiy) மழுங்கச் செய்கின்றது என்பது இப்படத்தின்ன செய்தியாக அமைகின்றது.

நாம் எங்கள் சமூகத்தை உற்று நோக்கும்போது இது முற்றிலும் உண்மை என்பது புலப்படும்; மங்கிய அல்லது மழுங்கிய ஒழுக்கவியல் சார் கூர்ந்தறி திறன் உருவாகி எங்கள் சமூகத்தின் கழுத்தை நெரிப்பதை உணரலாம். எடுத்துக்காட்டாக நோக்கும்போது, சில காலங்களுக்கு முன்னர், ஒரு கொலை நடந்துவிட்டால், அது அதிர்ச்சியூட்டுவதாக, மனுக்குலத்தில் நடக்கக் கூடாத ஒன்று நடந்து விட்டதாக,பத்திரிகைகளில் தலைப்புச்செய்தியாக இடம் பிடித்திருக்கும்; அதன் தாக்கம் தணிய பல காலங்கள் எடுத்திருப்பதும் எங்கள் அனுபவ உண்மை. ஆனால் இன்று போரில் நாளாந்தம் கொல்லப்படுவோரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையை கிறிக்கெட் ஓட்டங்களின் எண்ணிக்கையை கேட்பதைப் போல் கேட்டுவிட்டு சர்வசாதாரணமாக வாழ்கின்றோம்; சில வேளைகளில் சந்தோஷப்பட்டும் இருக்கின்றோம்.

ஆகவே, நிச்சயமாக, இந்த நிலையில் நாம் எங்கள் விழுமியங்களை மீளாய்வு செய்து பார்க்க கடமைப்பட்டுள்ளோம். அப்படியாயின் நாம் எவ்வாறு ஒரு துலக்கமான ஐம்புலன்சார் கூர்த்தறிதிறனை பெறமுடியும்? இந்த வினாவுக்கு விடை ஒன்றே, அதாவது நற்செய்தி விழுமியங்கள் வழியில் எமது மனச்சாட்சியை உருவாக்கி அதன் மூலம் இந்த ஒழுக்கம் சார் கூர்ந்தறி திறனைப் பெறமுடியும். ஆகவே சிறந்த மனச்சாட்சியை உருவாக்கல் இன்றைய சமூகத்தின் உடன் தேவையாகும். பெற்றோர், ஆசிரியர், ஆன்மீகத்தலைவர்கள் இப்பணியில் அதிகம் நாட்டம் காட்டல் வேண்டும்.

## 1. மனச்சாட்சியும் நீதிக் கொள்கையும் (Conscience and super-ego)

முதலில் ஒருவர் தனது சிறு பராயத்தில் இருந்து கட்டிளம் பருவத்தை அடையும்போது எவ்வாறு 'நீதிக் கொள்கை' (Super ego) மனச்சாட்சியாக உருவாகின்றது என்பதனை கவனிப்போம்.

டாக்டர் சிக்மண்டஃபிராட்டின் கருத்துப்படி மனிதனுடைய ஆழுமை (ஆள்+தன்மை) மூன்று நிலைகளாக பகுக்கப்பட்டுள்ளது.

**(i) இட் (Id) — இன்பக் கொள்கை (Pleasure Principle)**

இது இன்பம் தேடும் தத்துவத்தினால் மேலாதிக்கம் செய்யப்படுகின்றது. மனதில் தோன்றும்பகைமையுணர்வு, தன்னம்பிக்கையின்மை பொறுப்பின்மை, பாலுணர்வு போன்றவற்றிற்கு அடித்தளமாக அமைவது. இது பிடிவாதம் நிறைந்தது. குழந்தைப் பருவம் பெரும்பாலும் Id இன் ஆக்கிரமிப்பு நிறைந்ததாகும்,

**(ii) ஈகோ (Ego) — உண்மைக் கொள்கை (Reality Principle)**

இது நடைமுறை உலகத்திற்கும், 'இட்' உடைய தேவைகளுக்கும் இடையே நடுவராக இருந்து செயற்படும் ஒரு தன்னுணர்வு பெறா அமைப்பாகும் (Uncoascience structure)

**(iii) சூப்பர் ஈகோ (Super Ego) — நீதிக் கொள்கை:**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குற்றப்பழியை' தன்னுடைய ஒரு வலுவுள்ள ஆயுதமாகக் கொண்ட ஒரு கண்டிப்பு நிறைந்த மேற்பார்வையாளன் உலக நடைமுறைக்கும்; கலாச்சார பண்பாடுகளுக்கும் ஈகோவின் (Ego) செயல் ஒத்துப் போகின்றதா என்று கண்காணித்துக் கொள்ளும் ஒருவர் சிறுவயதில் இருந்து அன்பு செய்யப்படுவதும், ஏற்றுக்கொள்ளப்படுவதும் அடிப்படையில் இன்றியமையாதது என்றால் பிழையில்லை. இதனால்தான் பிள்ளைகள் தண்டனைக்கு பயப்படுகின்றார்கள். அதாவது சிறுவர்கள் தண்டனைகளை ஏற்று தங்கள் நடத்தைகளை ஒழுங்கு படுத்துகின்றார்கள். காரணம் தங்கள் உடல் உபாதைகள் மாத்திரமல்ல, தங்களுக்கு கிடைக்கும் அன்பும், ஏற்றுக்கொள்ளலும் கிடைக்காமல் விட்டுவிடுமோ என்னும் பயம். ஆகவே பிள்ளைகள் தங்கள் சுய பாதுகாப்புக்காக பெற்றோரின் அல்லது காப்பாளர்களின் நியம ஒழுங்குகளை உள்வாங்குகின்றன. இந்த நியமங்கள் மட்டில் பிள்ளைகள் ஒரு பயிற்றுவிக்கப்பட்ட கூட்டமாக திகழ்வர், தன்னுணர்வு பெற்ற பிள்ளைகளாக இருக்கமாட்டார்கள்.

## 1.2 நீதிக்கொள்கைக்கும் மனச்சாட்சிக்கும் இடையேயான வேறுபாடு:

நீதிக் கொள்கைக்கும் மனச்சாட்சிக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி உண்டு. இந்த இடைவெளியை அளப்பதற்கு எமது நடத்தைகளின் ஊற்றுக்கள் உதவுகின்றன, என்னால் செய்யப்பட வேண்டும் (Shoulds or have tos) என்பது சூப்பர் ஈகோவில் இருந்தும், 'நான் செய்ய வேண்டும்' (Want) என்பது மனச்சாட்சியில் இருந்தும், பிறக்கின்றது. சமூகத்தில் மற்றவர்கள் என்மட்டில் கொண்டுள்ள அன்பையும் ஏற்றுக்கொள்ளுதலையும் இழக்காமல் இருக்க நான் சூப்பர் ஈகோவைப் பின்பற்றுகின்றேன். மாறாக சமூகத்தில் உள்ள ஒழுக்கவியல் விழுமியங்களுக்கு என்னை அர்ப்பணிக்க வேண்டும் என்ற அன்பின் தூண்டுதலினால் மனச்சாட்சியை பின்பற்றுகின்றேன். என்னுடைய மனச்சாட்சியின் கட்டளைகள் சமூகத்தில் நான் பின்பற்ற விரும்பும் மனிதர்களின் வாழ்வுதாரணங்கள், சமூகத்தில் உள்ள ஒழுக்கவியல் விழுமியங்கள் என்பவற்றில் இருந்து பிறக்கின்றன.

## 1.3 நீதிக்கொள்கையில் இருந்து மனச்சாட்சிக்கான பயணம்:

மனச்சாட்சியை உருவாக்குவதற்கு சிறுவர்களிடையே காணப்பட வேண்டிய அடிப்படையானதும், அவசியமானதுமான நிலை நீதிக் கொள்கை (Super ego) ஆகும். இந்த நீதிக் கொள்கையில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்களைப் பெற்றுத் தனதாக்கி மனச்சாட்சியை உருவாக்குகின்ற பயணம் சுயமாக ஏற்படுவது அல்ல. மாறாக பெற்றோர், அதிகாரத்தில் உள்ளோர் போன்றவர்கள் குழந்தையில் உள்ள நீதிக் கொள்கையின் ஆதிக்கத்தை சரியாக நெறிப்படுத்தி அவர்கள் சுயமாக பதிலிறுக்க உதவவேண்டும்.

## 1.4. நீதிக்கொள்கையில் இருந்து மனச்சாட்சிக்கான பயணம் தடைப்படும்போது ஏற்படும் விளைவு:

இந்தப் பயணம் குழந்தைப் பருவத்தில் தொடங்கி வயது வந்தவர்களுக்கான பருவம் வரையானது. ஒரு நபரில் இக்காலத்தில் இந்த வளர்ச்சி சரியாக இடம்பெறாவிடில், அந்நபரில் பரிதாபகரமான விளைவுகள் ஏற்படும். பிரபல உளவியலாளர் அருட்திரு ஜேம்ஸ் கில்லின் (James Gill) கருத்துப்படி, நீதிக்கொள்கையில் இருந்து ஏற்படுவதும், முதிர்வயதில் ஏற்படும் மன உறுத்தலும்தான் உணர்ச்சி நெருக்கீட்டிற்கு (Emotinal pain) மிக முக்கிய காரணம் என்கிறார். அத்துடன், இந் நிலைக்கு கல்விமான்கள், குருக்கள் துறவிகள்கூட விதிவிலக்கல்ல இத்தகையோர் தம் இளமைப் பருவத்தில் தங்கள் மனச்சாட்சியை விருத்தி செய்யத் தவறியவர்களே, இவர்களை இவர்களுடைய பெற்றோர், குருக்கள், ஆசிரியர்கள் போன்றோர் தங்கள் சொந்த தனித்துவமான விழுமியங்களை காணவும், நாளாந்த வாழ்க்கை நிகழ்வுகளில் விழுமியங்களை கண்டுணரவும் உதவிசெய்யத் தவறிவிட்டார்கள் எனகின்றார்.

நீதிக் கொள்கையில் இருந்து மனச்சாட்சிக்கான பயணம் தடைப்பட்டவர்கள் தங்கள் ஒழுக்க வாழ்வில் நீதிக் கொள்கையின் நிலையில்தான் செயற்படுகிறார்கள். அதிகாரத்தில் இருப்போரை எதிர்க்கப் பயப்படுவர், வெகு இலகுவில் மனமுடைந்து போவர், ஒழுக்கம் சார் தீர்மானங்களை எடுப்பதற்கு முடியாமல் திண்டாடுவர். இத்தகைய குண இயல்புகள் இவர்களிடையே காணப்படும். ஆகவே வளர்ந்தவர்கள் சிறுவர்களுக்கு இந்த மனச்சாட்சி உருவாக்கலில் பெரிதும் உதவ வேண்டும். இந்தப் பயண நிகழ்வில் நற்பண்பு நாட்டல் (Character formation) நிகழ்கின்றது.

## 2. நற்குணாதிசயங்களை நாட்டுவதன் ஊடாக மனச்சாட்சியை உருவாக்குதல்.

Fromation & Conscience through Charactor Formation:

ஒழுக்க இறையியல் தனியே ஒழுக்கவியல்சார் முடிவுகளை மாத்திரம் எடுப்பதில்லை. மாறாக ஒழுக்கசீலர்களை உருவாக்குவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனம் செலுத்துகின்றது. ஆகவே மனச்சாட்சி உருவாக்கமானது தனியே ''நான் என்ன செய்ய வேண்டும்' என்ற வினாவுக்கு விடையளித்தால் போதாது, அது 'நான் எப்படிப்பட்ட ஒருவனாக உருவாக வேண்டும்?'' என்ற முதன்மையான ஒழுக்க வினாவுக்கு பதிலிறுக்க வேண்டும். அதாவது மனச்சாட்சி உருவாக்கம் என்பது உண்மைகளைப் பற்றிய அல்லது விழுமியங்கள் பற்றிய அறிவைப் பெறுவது மட்டுமல்ல ஒரு நல்ல முழு மனிதனை உருவாக்குவதாகும்.

## 2.1. நற்பண்பு நாட்டல் என்னுடைய கண்ணோட்டத்தில் தங்கியுள்ளது.

Vision character formation

பல காலமாக மனச்சாட்சி உருவாக்கத்தில் நற்பண்பு நாட்டல் கருத்தில் எடுக்கப்படவில்லை. ஒருவனுடைய மனச்சாட்சி மேற்கொள்ளும் தீர்மானம் அவனது இதயத்தில் இருந்து வரவேண்டுமானால், அது அதிகம் அவனது நற்பண்புகளில் (Charactor) தங்கியுள்ளது. அறநெறித் தேர்வுகள் ஒன்றுமில்லாமையில் இருந்து மேற்கொள்ளப் படுவதில்லை. நான் யாராக இருக்கின்றேன் என்பது நான் உலகினைப் பார்க்கும் விதத்திலும், என்னுடைய தெரிவுகளிலும் பிரதிபலிக்கின்றது. நான் ஒரு சூழ்நிலையைப்பற்றி விபரிக்கின்ற விதமும் நான் செய்கின்ற பலவிதமான தெரிவுகளும் என்னுடைய ஆள்த் தன்மையைப் பிரதிபலிக்கின்றன. ஆள்த் தன்மை என்னுடைய தெரிவுகளுக்கு வழிகோலுகின்றன; என்னுடைய தெரிவுகள் ஆள்த் தன்மையை உறுதிப் படுத்துகின்றன. எனவே ஆள்த்தன்மை உருவாக்கல் பற்றி சரியான முறையான கண்ணோட்டம் இன்றியமையாதது.

கண்ணோட்டம், தெரிவு என்பன மிக முக்கியமான எண்ணக் கருக்களாகும். கண்ணோட்டம் என்பது அறநெறி வாழ்வில் தெரிவுக்கு முன்வருவது. அதாவது நாங்கள் பார்ப்பதிலிருந்துதான் எதைச் செய்ய வேண்டும் என்று தெரிவு செய்கின்றோம். நாம் எதை விரும்புகின்றோமோ அதையே காண்கின்றோம். இதன் காரணமாகத்தான் எங்கள் அறநெறி வாழ்வில் பல வேறுபாடுகள் இருக்கின்றன. எங்களுடைய மனநிலைக்கும் (Attitude) தேர்வுகளுக்கும் அடித்தளமாகவுள்ள கண்ணோட்டங்கள் வேறுபட்டிருக்கின்றமையே இந்த வேறுபாடுகளுக்கும் காரணங்களாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மனச்சாட்சி உருவாக்கத்தில் முதலாவது படி சரியான விதத்தில் பார்க்க உதவுதல். ஆகவே "நான் இந்த இடத்தில் என்ன செய்ய வேண்டும்" என்ற கேள்விக்கு முன்பாக, "இங்கே என்ன நடக்கிறது" என்ற கேள்வியைக் கேட்க வேண்டும். இக்கேள்வி கண்ணோட்டம் தொடர்பானது. அநேகமாக இங்கு என்ன நடைபெறுகின்றது என்று பார்க்கும் இந்த கண்ணோட்டமானது மனச்சாட்சியின் பகுத்தறிவுத் தெளிவுகள் அல்ல. உதாரணமாக பெற்றோர் தம் பிள்ளைகளை பாரம் என்று நினைத்தால் அன்புடன் அவர்களை பராமரிக்க மாட்டார்கள். ஒருவர் தன்னுடைய சகாக்களை போட்டியாளர்கள் என்று நினைத்தால் அவர்களுடன் ஒத்துழைக்க மாட்டார். எனவே நான் எப்படிப் பார்க்கிறேன், எதைப் பார்க்கிறேன் என்பன எனது செயற்பாடுகளுக்கான வழியையும், எல்லைகளையும் நிர்ணயிக்கின்றன.

## 2.2. கண்ணோட்டம் என்பது சமுதாயத்தின் கூட்டு முயற்சியாகும்.

எங்கள் மனச்சாட்சி உருவாக்கத்தில் சட்டங்களைப் படிப்பது முதலாவது படியல்ல, மாறாக சட்டங்களை எப்படிப் பார்ப்பது என்பதைப் படிக்க வேண்டும். அநேகமாக சட்டங்களைப் பார்க்கும் இந்தக் கண்ணோட்டம் எமக்காக நாங்களே கொடுக்கும் ஒன்று அல்ல, இது ஒரு கூட்டு முயற்சியாகும். இந்தக் கண்ணோட்டம் நான் கொண்டுள்ள உறவுகள், நான் வாழ்கின்ற சூழல்கள், நான் மேற்கொள்கின்ற அர்ப்பணிப்புகளில் தங்கியுள்ளது. எனவே அறநெறி வாழ்வு என்பது சட்டதிட்டங்களில் மாத்திரம் தங்கியுள்ளது அல்ல, அது சமூகத்தில் இருக்கின்ற கதைகள் உருவகங்கள் என்பவற்றிலும் அதிகமாக தங்கியிருக்கின்றது. உதாரணமா ஒரு பங்கை எடுத்துக்கொள்வோமானால் அங்கே ஆலயத்தின் சுவர்களில் தொங்குகின்ற படங்கள் ஆண்டவர் அன்பானவர் என்பதை வெளிப்படுத்துகின்றன. அந்தப் பங்கில் இருக்கும் குருவின் மறையுரைகள் இதை உறுதிப்படுத்துகின்றன. இன்னும் அந்தப் பங்கின் மனித உறவுகள் இதை மீண்டும் உறுதிப் படுத்துகின்றன. எனவே ஒருவர் சுவரில் பார்த்த உருவமும், அக்குருவின் மறையுரையும் இன்னும் உறவுகளில் அவர் பெற்ற அனுபவமும் அவருடைய ஆள்த்தன்மையை உருவாக்கி அவரின் வாழ்வின் எத்துன்ப வேளையிலும் இறைவன் அவரை ஆழமாக அன்பு செய்கின்றார் என்பதை உணர்த்துகின்றது. எனவே நான் வாழுகின்ற சமூகம் .என்னுடைய மனச்சாட்சி உருவாக்கத்துக்கு இன்றியமையாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய உலகம் நான் வாழும் குடும்பமும், நான் அங்கம் வகிக்கும் ஆலயம் மாத்திரமல்ல; என்னுடைய வாழ்வை நெறிப்படுத்து பலவை சமய நம்பிக்கைகளும், கதைகளும் மாத்திரமல்ல, மாறாக நான் வாழும் சூழ்நிலையின் ஒவ்வொரு அசைவும் என்னுடைய மனச்சாட்சி உருவாக்கத்தில் பிரதிபலிக்கின்றன. எனவேதான் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் எந்தப் பாடசாலைக்குப் போகின்றார்கள், எப்படியான நண்பர்களைத் தேடிக்கொள்கின்றார்கள், தங்கள் ஓய்வு நேரங்களை எவ்வாறு செலவிடுகின்றார்கள், எவ்வாறான படக்காட்சி களைப் பார்க்கின்றார்கள் என்பதையிட்டு கவலை கொள்கின்றார்கள். அவர்கள் கவலைப்படுவதற்கான காரணம் பிள்ளைகளுடைய மனச் சாட்சி அவர்கள் வாழுகின்ற, பார்க்கின்ற, செயற்படுகின்ற அமைப்பு களிலே தங்கியுள்ளது என்பதாலாகும். எனவே நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கு எவ்வளவுக்கு அதிகமாக நல்ல சூழ்நிலைகளை அமைத்துக் கொடுக்கின்றோமோ அவ்வளவுக்கு அதிகமாக நல்ல மனச்சாட்சி அவர்களிடையே உருவாகும்.

ஒருவர் எந்தளவுக்கு கிறிஸ்தவ சமூகத்தில் தன்னை உட்படுத்தி அதன் வழியில் பயணிக்க ஆயத்தமாக இருக்கின்றாரோ அந்தளவுக்கு அவருடைய நம்பிக்கைகள், கதைகள் அவருடைய மனச்சாட்சியை பாதித்து உருவாக்கும். ஆனால் இன்று கிறிஸ்தவ சமூகங்களுக்கும் மற்றைய சமூகங்களுக்கும் இடையே போட்டிகள் உருப் பெறுகின்றன. இதனால் மற்றைய சமூகங்கள் கிறிஸ்தவ சமூகம் கொண்டுள்ள நம்பிக்கைகள், கதைகள் என்பவற்றுக்கு முரணான கருத்துக்களை பிள்ளைகளுக்கு கொடுக்கின்றன. ஆகவே கிறிஸ்தவ குடும்பங்களும் திருச்சபையும் அவர்களுக்கு சரியான விழுமியங்களை கொடுத்து அவர்களை உருவாக்க வேண்டும்.

## 2.3. உருவகங்களும் கதைகளும் ஒருவரின் கற்பனா சக்தியை தூண்டுகின்றன

என்னுடைய கற்பனைகள் என்னுடைய ஒழுக்க வாழ்வுக்குரிய தலைசிறந்த ஊற்றாகும். என்னுடைய கற்பனா சக்தியின் ஊடாக என்னுடைய எல்லாவிதமான அனுபவங்களையும் நான் ஒருமுகப்படுத்த முனைகின்றேன். என்னுடைய நடத்தை நான் உண்மை என்று கருது கின்ற பல அறநெறிக் கருத்துக்களின் தொகுப்பு அல்ல, மாறாக நான் கொண்டுள்ள கற்பனைகளின், சிந்தனைகளின், உருவாக்கங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பாகும். காரணம் இவைகளே எனக்கு உலகு பற்றிய ஒரு சிறந்த கண்ணோட்டத்தை தருகின்றது.

என்னுடைய கற்பனை, எனது பார்வையில் பாதிப்பை ஏற்படுத்தி என்னுடைய நடத்தையில் ஆதிக்கம் செலுத்துகின்றது. உதாரணமாக ஒரு கதையை மறையுரையில் உபயோகிக்கும்போது அது ஒரு சக்தி வாய்ந்த ஊடகமாக செய்தியை காவுகின்றது. வழமையாக மறையுரையில் கூறப்படும் விடையங்கள் பல எம் மக்கள் உள்ளங்களில் பதியாததற்கு காரணம், அவர்களுக்கு புத்தியில்லை என்பதனால் அல்ல, மாறாக அவர்களின் பார்வை கற்பனை, சிந்தனை போன்றன வேறு திசையில் இருக்கின்றமை. ஒரு நல்ல கதையைப் பயன்படுத்தி ஒரு செய்தியைக் கூறும்போது ஒருவரின் முன்னைய சிந்தனைப் போக்கு மாற்றமடைந்து புதிய பார்வைக்கு இது வழிவகுக்கும். இதனால் அவர் கூறுவார், ''சடுதியாக அது எனக்கு புரிகின்றது, இந்தமாதிரி நான் முன்பு பார்க்கவில்லை'' என்று நான் புதிதாக பார்க்க முயலும்போது, புதிதாக வாழ முயற்சிப்பேன். ஆகவே நாம் எந்த அளவுக்கு கிறிஸ்தவ கதைகளை, உருவகங்களை மக்களின் சிந்தனைக்கு கற்பனைக்கு கொடுக்கின்றோமே அந்த அளவுக்கு நல்ல மனச்சாட்சியை கொண்ட கிறிஸ்தவ விழுமியங்களை வாழும் மனிதர்களை உருவாக்கலாம்.

## 2.4. மனச்சாட்சி உருவாக்கம் சமூகத்தில் தங்கியுள்ளது,

நாங்கள் ஏற்கனவே பார்த்ததுபோல் மனச்சாட்சியின் உருவாக்கம் அறநெறிச் சட்டங்களை ஒருவருக்கு வழங்குவதன் மூலம் ஏற்படுவதில்லை. மாறாக நல்ல குணாதிசியங்களைக் கொண்ட ஒருவரை உருவாக்குவதன் மூலம் ஏற்படுத்த முடியும். இது ஒருவர் வாழ்க்கையில் கொண்டுள்ள அடிப்படைக் கண்ணோட்டத்தில் தங்கியுள்ளது. இந்த அடிப்படைக் கண்ணோட்டம் ஒரு சமூக முயற்சியாகும். எனவே மனச்சாட்சி உருவாக்கம் ஒரு சமூக முயற்சியாகும். மனச்சாட்சியை உருவாக்குவதற்காக சரியான உருவகங்கள், விழுமியங்கள் என்பவற்றை கொடுப்பது சமூகத்தின் கடமையாகும். இன்னும் சிறப்பாக சமூகத்தில் பரந்துபட்டுக் கிடக்கின்ற பிழையான விழுமியங்களை எதிர் கொள்வதும் சமூகத்தின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவாக.

இன்றைய சமூகத்தில் உள்ள பலவிதமான ஆரோக்கிய மற்ற கருத்துக்களும், விழுமியங்களும், அமைப்புக்களுமே இன்றைய அறநெறி சிக்கல்களுக்கு காரணங்களாகின்றன. எனவே கிறிஸ்தவ விழுமியங்களைக் கொண்ட சரியான உருவகங்களையும், மாதிரிகைகளையும் காட்டக்கூடிய சிறு சமூகங்களை அமைப்பதன் மூலமே இந்தச் சமூகத்தில் உள்ள தீமைகளை எதிர் கொள்ள முடியும். எனவே சமூக உருவாக்கம் மனச்சாட்சி உருவாக்கத்துக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

எனவே சிறிய கிறிஸ்தவ சமூகங்களை அமைப்பது மூன்றாம் யுகத்துக்கு ஒரு அடிப்படைத் தேவை என்று ஆசிய ஆயர் மன்றம் கருதுவது மிகச் சரியே. ஏனெனில் இதன் மூலமாக ஒரு சிறந்த அறநெறிச் சமூகத்தை உருவாக்கலாம். இந்தச் சிறிய குழுமங்கள் மூலமே சரியான விழுமியங்களை மக்கள் மனதில் புகுத்தி அவர்கள் மனச்சாட்சியை உருவாக்கமுடியும்.

## உசாத்துணை நூல்கள்.

GULA, Richard., M. Reason Infoamed by Faith: Foundations and Catholie Morality, Paulist Press, New York, 1989

HODGE, Robert, What's Consience for?. St. Pauls Ireland, 1995

SMITH, Russell E., Catholic Conscience: Foundation and Formation. The Knights of Columbus. Connecticut. 1991,

---

" மனச்சாட்சி ஒரு மனிதனுக்குக்
கொடுக்கும் சாட்டை அடி.
இதை அவனுக்கு எந்த நீதிமன்றமும்
கொடுக்கப்போவதில்லை. "

மகாத்தமா காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபையில் வேதாகமம்

அருள்திரு மைக்கல் சௌந்தரநாயகம்

## முன்னுரை

விவிலியத்தை புரிந்துகொள்வது இலகுவானதல்ல. வேதாகமத்தின் தன்மையை, அதன் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்வதில் உள்ள பிரச்சனைகள் வேதாகமத்தின் பழமையை ஒத்த பழமை வாய்ந்த பிரச்சினைகள் ஆகும். வேதாகமத்தின் பல பகுதிகள் இலகுவாக புரிந்து கொள்ளக்கூடியவை. அதேவேளையில் குறிப்பிடத்தக்க அளவு பகுதிகள் புரிந்துகொள்ளக் கடினமானவை.

## அங்கீகரிக்கப்பட்ட ஒரு விவிலிய விளக்கமுறையின் அவசியம்:

எரேமியாவின் ஒரு சில இறைவாக்குகளைப் படிக்கின்ற போது, அவற்றின் கருத்தை புரிந்துகொள்ளும் முயற்சியிலே வேதாகமத்தின் பிற நூல்களை ஒருவர் படிப்பதை தானியேல் ஆகமம் காட்டுகின்றது. ''அவனது முதல் ஆட்சியாண்டில் தானியேல் ஆகிய நான், எருசலேம் பாழ்நிலையில் கிடக்கும் காலம், எரேமியா இறைவாக்கினர்க்கு ஆண்டவர் உரைத்தபடி எழுபது ஆண்டுகள் ஆகும் என்று நூல்களில் இருந்து படித்தறிந்தேன் (தானி 9: 2). தூய பேதுரு திருத்தூதரும், ''நம் அன்பார்ந்த சகோதரர் பவுலும் தமக்கு அருளப்பட்ட ஞானத்தின் படி இவ்வாறுதான் உங்களுக்கு எழுதியுள்ளார் (2 பேது. 3: 15) எனக் கூறுகின்றார். மேலும் திருத்தூதர் பணிகள் நூலில் வரும் ''காந்தகி'' என்ற பட்டத்தால் அழைக்கப்படும் எத்தியோப்பிய நாட்டு அரசியின் பொருளமைச்சனான அண்ணகனும் எசாயா நூலை வாசித்து அதன் அர்த்தத்தை புரிந்துகொள்ள முடியாதவனாய், அதைத் தெளிவுபடுத்தக்கூடிய வேதாகம அறிவுபடைத்த ஒருவரை எதிர்பார்த்து நிற்கக்காண்கின்றோம் (தி. தூ. ப. 8: 30–35)

புனித பேதுரு எழுதிய 2ஆம் திருமுகத்தில் கூறப்பட்டுள்ளபடி வேதாகமத்தின் இறைவாக்குகள் வெறுமனே தனிப்பட்ட ஆட்களின் விளக்கமளித்தலுக்கு உரியவை அல்ல (2 பேது. 1: 20). அவ்வாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 பேதுரு 3; 16லும் கூறப்பட்டுள்ளது. வேதாகமம் உயிருள்ள, வாழ்கின்ற விசுவாசிகள் கூட்டத்துக்குள் உருப்பெற்ற நூற்தொகுப்பாகும். வேதாகமத்தின் ஒரு பந்தியை, குறிப்பாக பிரச்சினைக்குரிய பந்தியை நியாயமான முறையில் விளக்குவதற்கு அதற்குரிய பரிசோதிக்கப்பட்ட திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை ஒன்றை பயன்படுத்துவது அவசியம்.

இந்த முறையிலே, ஒரு பந்தியின் தற்போதைய இறுதி வடிவம் வேதாகமத்திலே எழுத்தில் உருவாகுவதற்கு முன் இருந்த காலப் பகுதியில் அதன் வடிவம் எவ்வாறு தொடர்ந்து வந்துகொண்டிருந்தது என்று ஆராய்கின்ற வளர்ச்சிப்படிகளின் சரித்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது (Historical development of the text).

## சமகால தப்பான விளக்க முறைகள்:

சில வேளைகளில் இந்த வரலாற்று வளர்ச்சிப்படிமுறை ஆய்வு கடினமானதாகத் தோன்றுவதால் பலர் இதைக் கைவிட்டு ஒரு வேதாகமப் பகுதியை விளங்கிக் கொள்வதற்கு தற்போதைய நிலையில் எழுதப் பட்டிருக்கின்ற பந்தியாக, அது அமைந்து இருக்கின்ற தன்மையை மாத்திரம் கருத்தில் கொண்டு, அவரவர் அதை வாசிக்கும் பொழுது என்னென்ன சிந்தனைகள் பிறக்கின்றனவோ அவற்றிற்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து தனிப்பட்ட ரீதியில் விளங்கிக்கொள்வதை ஊக்குவிக்கின்றனர். அப்படியாக உடனடியாக வாசிக்கும் போது உடனே என்னவிதமான சமய உணர்வுகள் ஏற்படுகின்றனவோ அவற்றோடு மட்டும் நின்றுகொண்டு திருப்தி அடைய முயல்கின்றனர். இன்னும் சிலர் குறிப்பாக புதிய ஏற்பாட்டில், தனிப்பட்ட ரீதியில், தமது பார்வையில் தாம் கண்டுகொள்ள விரும்புகின்ற ஒரு கிறிஸ்துவை எழுத்துவடிவில் இருக்கின்ற புதியஏற்பாட்டில் கண்டு கொள்ள முனைகின்றனர். இன்னும் சிலர் தம் தனிப்பட்ட வாழ்விலும் சமூகவாழ்விலும் தாம் சந்திக்கின்ற எல்லாவிதமான பிரச்சினைகளுக்குமான பதிலையோ, தீர்வையோ வேதாகமம் உடனடியாகச் சுடச்சுடத் தரும் என்று பிடிவாதமாக கூறுகின்றனர். இதைவிட பெரிய பிரச்சனையாக இன்று காணப்படுவது நூற்றுக்கணக்காகச் சிதறிக் கிடக்கும் அடிப்படை வாதக் குழுக்களின் நிலைப்பாடு, அவர்களின் பவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகமத்தின் சரியான அர்த்தத்தை புரிந்துகொள்வதற்கு தமக்கென்று தனித்துவமான வெளிப்பாடு இருப்பதாக பறைசாற்றி வருகின்றனர்!

கத்தோலிக்க திருச்சபையானது முதன்மையாக ஏற்றுக்கொள்கின்ற சரித்திர அடிப்படையிலான இலக்கிய ஆய்வுமுறையானது பலராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகும். இது இலக்கிய ஆய்வு ஒழுங்கு முறைகளுக்கு அமைந்ததாகவும் உள்ளது. இந்த முறையானது வேதாகமத்தின் நூல் உருவாக்கத்தின் சரித்திரத்தை கூர்ந்து கவனிக்கின்றது.

## பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு

பழைய ஏற்பாட்டில் உள்ள 46 நூல்களும் (எரேமியா நூலையும், புலம்பல் நூலையும் ஒரேயடியாக எண்ணினால் 45 நூல்கள்). இன்று நாம் காண்கின்ற இறுதிவடிவத்தை அடைவதற்கு ஏறத்தாள 1000 வருடங்கள் தேவைப்பட்டிருக்கின்றன. உதாரணமாக கி. மு 1800க்கு முற்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்த ஆபிரகாமைப்பற்றிய விபரிப்புகளும், அதனைத் தொடர்ந்து வருகின்ற பிதாப்பிதாக்கள், மோசே, விடுதலைப்பயணம், வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குள் புகுதல் போன்ற விடயங்கள் அடங்கிய ஐந்நூல் கி. மு. 400ஆம் ஆண்டளவிலேயே எழுத்து வடிவில் முற்றுப்பெற்று நம் மூதாதையர்களாகிய யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவ்வாறே இறைவாக்கினருடைய நூல்களும் கி. மு. 900ஆம் ஆண்டு காலப்பகுதியைச் சேர்ந்த விடயங்களையும் அதற்கு பிற்பட்ட காலத்துக்குரிய விடயங்களையும் (ஆமோஸ்-750, ஓசே-750, ஏசாயா (1-39)-746, மீக்கா, 750, எரேமியா – 626, செப்போனியா – 622க்கு முன் நகூம் – 612க்கு முன், அபகூக் – 612க்கு முன் எசேக்கியேல் – 593, ஏசாயா (40-55)–538, ஆகாய்-520, (i) சக்கரியா-520, (1-8), ஒபாதியா–586க்கு பின், மலாக்கியா–500, யோவேல் 330, (ii) சக்கரியா –332, (9-14) யோனா–200க்கு முன்) கொண்டிருந்தாலும், கி.மு. 200ஆம் ஆண்டளவிலேயே இப்பொழுது நாம் பயன்படுத்துகின்ற இறுதி வடிவத்தை அடைந்தன. பழைய ஏற்பாட்டின் ஏனைய நூல்கள் ஜெருசலேம் தேவாலயம் கி. பி. 70 ஆம் ஆண்டில் உரோமையர்களால் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து கி. பி. 2 ஆம் நூற்றாண்டிலேயே நாம் இப்போது அவற்றைக் காணுகின்ற இறுதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து வடிவத்தைப் பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டன. யூதர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டு நூல்கள் கி. பி. 2ஆம் நூற்றாண்டில் வரையறுக்கப்படுவதற்கு, கிறிஸ்தவ மறையின் வளர்ச்சியும் பரவலும் ஒரு காரணமாக இருந்தது. எனவே, இந்த நூல்களின் வளர்ச்சியினதும், உருவாக்கத்தினதும் சரித்திரம் அவற்றின் உள்ளடக்கத்தை சரியாக புரிந்து கொள்வதற்கு எவ்வளவு முக்கியமானது என்று சொல்லாமலே விளங்கவேண்டும். அந்தந்த காலப் பகுதிகளில் வேறுபட்ட சமய, அரசியல், கலாச்சார பின்னணிகளோடு வாழ்ந்து வந்த மக்களை கேட்போராகவும், நுகர்வோராகவும், ஈடுபட்ட பங்காளிகளாகவும் கொண்டு முதலில் வாய்மொழிப்பாரம்பரியமாகவும், பின்னர் படிப்படியாக எழுத்து வடிவமாகவும் காணப்பட்டு முறையே தனித்தனி நூல்களாகவும், தொகுப்புக்களாகவும் இந்நூல்கள் உருப் பெற்றன.

## புதிய ஏற்பாட்டு நூற்தொகுப்பு:

இதே விதமாகத்தான் புதிய ஏற்பாட்டில் இன்று நாம் காண்கின்ற 27 நூல்களும் ஏறத்தாள 100 வருடகால இடைவெளியில் உருவானவை எனலாம். கி. பி. 50ஆம் ஆண்டளவிலேயே புதிய ஏற்பாட்டின் பழமை பொருந்திய நூலாகிய தூய பவுல் தெசலோனியருக்கு எழுதிய முதல் திருமுகம் எழுதப்பட்டது. இதற்கு முன்னர் கூட நூல் வடிவம் பெறாமல் வாய்மொழிப்பாரம்பரியயாகவும், இலக்கிய வடிவங்களின் தொகுப்புக்களாக எழுத்திலும் புதிய ஏற்பாட்டின் சில பகுதிகள் இருந்தன.

உதாரணமாக ஒத்தமை நற்செய்திகளில் காணப்படுகின்ற கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்புப் பற்றிய ஆரம்பப் போதனைப் பகுதியும், அவருடைய புதுமைகள் உவமைகள் போன்ற இலக்கிய வடிவங்களும் வாய்மொழிப் பாரம்பரியத்தில் முதலில் இருந்து பின்னர்எழுத்து வடிவமாகவும் பகுதி பகுதியாக பயன்பாட்டில் இருந்திருக்க வேண்டும். அதன் பின்னர் இன்று நம் கைவசம் உள்ளவைகளைவிட அளவில் சிறிய நற்செய்தி நூல்களாக கி. பி. 60கு முன் அவை எழுத்து வடிவத்தில் இருந்திருக்க வேண்டும். உதாரணம் மத்தேயு நற்செய்தியின் ஆரம்ப அரேமிக் மொழிமூலம். சின்ன ஆசியாவின் பிரிகியாவைச் சேர்ந்த ஏயிரோபொலி பப்பியாஸ் என்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப்பற்றி "ஆண்டவரின் வார்த்தைகளின் விளக்கம்" என்ற தம்முடைய நூலில் குறிப்பிடுகின்றார், "மத்தேயு" அரேமிக் மொழியில் எழுதித் தொகுத்த (இயேசுவின்) வார்த்தைகளை ஒவ்வொருவரும் தம்மால் இயன்றவரை விரித்துரைக்க (மொழிபெயர்க்க) முயன்றார்கள். இதற்கு ஆதாரமாக லூக்கா, நம்மிடையே நிறைவேறிய நிகழ்ச்சிகளை முறைப்படுத்தி ஒரு வரலாறு எழுதப் பலர் தமக்கு முன் முயன்றுள்ளனர். (லூக். 1: 1) எனக் கூறுகின்றார்.

## கத்தோலிக்க திருச்சபை ஆசிரியத்தின் பார்வையில் விவிலிய விளக்க முறை:

நம் மூதாதையராகிய இஸ்ரயேல் மக்கள் இறைவனுடைய பரிசுத்த சமூகமாக எகிப்திலிருந்து புறப்பட்டு வரும் வழியிலே புது உருப்பெற்றனர் (நெகே 13: 1; எண். 20; 4; இணை. 23; 1) இவ்வாறே புதிய இஸ்ரேலாகிய புதிய ஏற்பாட்டின் திருச்சபையும் கிறிஸ்துவின் திருச்சபையாக ஒன்று சேர்க்கப்படுகின்றது (மத். 16 18; 2ஆம் வத். சங்க ஏடு 'திருச்சபை' 9).

இறைவனுடைய வார்த்தை போதிக்கப்படுவதன் விளைவாக குறிப்பாக நற்செய்தி போதிக்கப்படுவதன் விளைவாக விடுக்கப்படுகின்ற அழைப்பை ஏற்றுக்கொள்வோர் கிறிஸ்துவின் திருச்சபையாக ஒன்று சேர்க்கப்படுகின்றனர். "நீங்கள் அழியக்கூடிய விதத்தினால் அல்ல; மாறாக உயிருள்ளதும், நிலைத்திருப்பதுமான, அழியா வித்தாகிய கடவுளின் வார்த்தையால் புதுப்பிறப்பு அடைந்துள்ளீர்கள்" (1 பேதுரு 1: 23). இந்த புதுப்பிறப்புப்பற்றி யோவான் எழுதி வைத்துள்ளபடி இயேசு கூறுவது, "ஒருவர் தண்ணீராலும், தூய ஆவியாலும் பிறந்தால் அன்றி இறை ஆட்சிக்கு உட்பட இயலாது" (1 யோவான் 3; 5) இவ்வாறு உருவாகும் இறையாட்சியின் மக்கள் கூட்டத்தை பேதுரு சிறப்பாக விபரிக்கின்றார், "ஆனால், நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரசகுருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர்; அவரது உரிமை சொத்தான மக்கள், எனவே உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி. முன்பு நீங்கள் ஒரு மக்களினமாய் இருக்கவில்லை. இப்பொழுது கடவுளுடைய மக்களாக இருக்கிறீர்கள். முன்பு இரக்கம் பெறாதவர்களாய் இருந்தீர்கள்; இப்பொழுதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கம் பெற்றுள்ளீர்கள்'' (1 பேதுரு 2: 9–10). கிறிஸ்துவின் உரிமைச் சொத்தாகிய இந்த மக்களின் சபையை அழைத்து ஒன்றிணைக்கும் பொறுப்பு தனித்துவமானது. இது சிறப்பான சாட்சிகளாகிய பன்னிருவர் குழுவாக அழைக்கப்பெற்ற திருத்தூதர்களுக்கும் (அப்போஸ்தலர்) அவர்களைத் தொடர்ந்து முறைப்படி வழிவரும் ஆயர்களுக்கும் கொடுக்கப்பட்டது. "இயேசு அவர்களை நோக்கி உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்... என்று கூறினார்'' (மாற் 16: 15). அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியை பறைசாற்றினர். ஆண்டவரும் உடனிருந்து செயல்பட்டு, நிகழ்ந்த அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார். இவ்வாறு கிறிஸ்துவின் திருந்தூதர்கள் நற்செய்தியை அறிவித்து அதை ஏற்றுக்கொண்டோரை திருச்சபையாக ஒன்று சேர்த்தனர். இந்த திருத்தூதர்கள் இறைவார்த்தையை அதிகார பூர்வமாக பிறருடன் பகிர்ந்துகொண்டவர். "உங்களுக்கு செவிசாய்ப்பவர் எனக்கு செவிசாய்க்கிறார்; உங்களைப் புறக்கணிப்பவர் என்னை புறக்கணிக்கிறார்'' (லூக் 10: 16) திருத்தூதர்களும் அவர்கள் வழிவரும் ஆயர்களும் கிறிஸ்து அவர்களிடம் ஒப்படைத்ததையே தொடர்ந்து வரும் சந்ததியினருக்கு பிரமாணிக்கமாக அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். "நான் உங்களுக்கு கட்டளை இட்டயாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள் (மத். 28: 20) 2ஆம் வத். சங்க ஏடு – 'இறைவெளிப்பாடு' 21.

எழுத்திலே நாளடைவில் உருவாகிய புதியஏற்பாட்டு நூல்கள் முதன்மையான சாட்சிகளாகிய திருத்தூதர்களால் அல்லது அவர்களோடு ஒத்துழைத்த, நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்த உடன் உழைப்பாளர்களால் எழுதப்பட்டன. இந்நூல்கள் தூய ஆவியின் ஏவுதலால், வாழுகின்றதும், ஈடுபாடுகொண்டதுமான ஆரம்பத் திருச்சபைக்குள் உருப்பெற்றன. அவற்றின் உள்ளடக்கம் இறைவனின் வார்த்தையே எனப் பறைசாற்றுவதற்கு அடிப்படையாக இருப்பது இவற்றின் இறை ஏவுதல்பற்றிய உறுதியும் உத்தரவாதமுமே. இந்த உறுதியையும் உத்தரவாதத்தையும் வெளிப்படையாக அறிவித்து அதிகார பூர்வமாக நூல்களை இறைமக்கள் பாவனைக்கு திறந்துவிடும் பொறுப்பு திருச்சபைக்கே உரியதாகும். இவ்வாறு 27 புதிய ஏற்பாட்டு நூல்களை மாத்திரம் தூய ஆவியின் ஏவுதல் பெற்ற நூல்கள் என்று உயிருள்ள பாரம்பரியத்தைக் கொண்ட திருச்சபையின் அதிகாரபூர்வமான ஆசிரியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகடனப்படுத்தியுள்ளது. ஆசிரியம் என்று சொல்லும்போது குறிப்பிட்ட காலப்பகுதியில் பேதுருவினதும் அவரோடு இணைந்த திருத்தூதர் குழுவினதும் முறைப்படி வழிவந்தவர்களாக, திருச்சபையை அதிகாரபூர்வமாக ஆண்டு நடாத்துவோரின் குழுவை குறிக்கும். இன்றுள்ள சூழ்நிலையில் இந்த ஆயர் குழு பாப்பிறையின் தலைமையில் ஒருங்கிணைகின்ற அங்கத்தவர்களைக் கொண்டது. திருச்சபையின் உயிருள்ள பாரம்பரியம் எனும் போது இயேசுவின் கண்கண்ட சாட்சிகளான திருத்தூதர் காலத்திலிருந்து இன்றுவரையுள்ள நீண்டகாலப் பகுதியில் இருந்துவந்த ஆசிரிய பாரம்பரியத்தை குறிப்பது எனலாம். இதுவிடயத்தில் திருச்சபையின் தந்தையர்களின் பங்களிப்பு பாரம்பரியத்தினுள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

## இறைவார்த்தைமட்டில் திருச்சபையின் பொறுப்பு.

இறைவார்த்தையாகிய வேதாகமத்தை பொறுத்தவரையில் அதைப் பெற்றுக்கொண்ட நிலையிலே இருந்து விலகி மாற்றமடையாவண்ணம் உள்ளதை உள்ளபடி பாதுகாப்பதும், அதன் உள்ளடக்கத்தின் சரியான அர்த்தத்தை இறைமக்களும் ஆர்வமுடைய பிறரும் அறிந்து கொள்ளும் வண்ணம் உரிய விளக்கத்தை அளிப்பதும் திருச்சபையின் பொறுப்பாகும். திருத்தூதர் பேதுரு இதுபற்றித் தெளிவாக குறிப்பிடுகின்றார். ''சகோதரர் பவுலுடைய திருமுகங்களில் புரிந்து கொள்வதற்கு கடினமானவை சில உண்டு, கல்வி அறிவில்லாதவர்களும், உறுதியற்றவர்களும் மறைநூலின் மற்றப் பகுதிகளுக்கு பொருள் திரித்துக் கூறுவது போல் இவற்றுக்கும் கூறுகின்றனர்; அதனால் தங்களுக்கே அழிவை வருவித்துக் கொள்கின்றனர் (2 பேது. 3:15-16). திருச்சபையின் ஆசிரியம் இறைவார்த்தைக்கு விளக்கம் அளிக்கும்போது இயேசுக்கிறிஸ்துவின் பெயராலேயே அதிகாரபூர்வமாகச் செயற்படுகிறது

இவ்வாறு திருச்சபையின் ஆசிரியம் இறைவார்த்தையை பாதுகாப்பதிலும் அதற்கு சரியான விளக்கம் அளிப்பதிலும் கருத்தாய் இருப்பதற்கு முதன்மையான காரணம் அதன் இறைமக்களின் சரியான ஊட்டம் பற்றிய அக்கறையே. இறைமக்கள் இறைவார்த்தையை சரியான முறையில் உள்வாங்கி தம் கிறிஸ்தவ வாழ்விற்கு அதை உணவாக்கி இவ்வுலகில் வாழ்ந்து நிலைவாழ்வை அடைய வேண்டும் என்ற குறிக்கோளைவைத்து முனைந்து செயற்பட பொறுப்புள்ள பிரதிநிதிகளை வலியுறுத்தி வருகின்றது. குறிப்பாக தளத்திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் ஆயர்களும், குருக்களும் இறைவார்த்தை தம் கண்காணிப்பி லுள்ள இறைமக்களை உகந்த முறையில் சென்றடைகிறதா என்று விழிப்புடன் கவனித்து செயலாற்ற அறைகூவல் விடுக்கின்றது. இது காரணத்தால் தான் அற்ப அறிவுடனும் குறுகிய நோக்குடனும் இறைவார்த்தையை திரிபுபடுத்தி பயன்படுத்துவோர் மட்டில் எச்சரிக்கையாக இருக்க இறைமக்களைக் கேட்கிறது.

## முடிவுரை.

இதனால்தான் அன்னையாம் திருச்சபை நம் முன்னோராகிய யூத மதத்தினர் ஏற்றுக்கொள்வதை விட (39 நூல்கள்) அதிகமாக 7 நூல்களை பழைய ஏற்பாட்டிலும் (மொத்தம் 46), 27 நூல்களை புதிய ஏற்பாட்டிலும் கொண்ட 73 நூல்களடங்கிய திருவிவிலியத்தை திட்டவட்டமாக வரையறை செய்து தூய ஆவியின் ஏவுதலின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்களால் எழுதப்பட்ட இறைவார்த்தை என்று இறைமக்களுக்கு பகிர்ந்தளிக்கின்றது. காலாதிகாலமாக ஈராயிரம் வருடங்களாக கத்தோலிக்க ஒற்றுமையில் அசையாத நம் பிக்கை வைத்து, வாழுகின்ற பாரம்பரியத்தில், உயிருள்ள வார்த்தையாக உறுதிப்படுத்தப்பட்டு உவந்தளிக்கப்பட்ட இறைவார்த்தை தொடர்ந்தும் மாறாமல் என்றும் புதுப் பொலிவுடன் இனிவரும் காலத்திலும் 30, 60, 100 என்று பலன் கொடுக்கும் என்பது உறுதி. "வானமும் பூமியும் ஒழிந்து போகும். என் வார்த்தைகளோ ஒழியவே ஒழியா (மத். 24: 35-36)

## உசாத்துணை நூல்கள்


LIENHARD, Joseph. T., The Bible, the Church and Authority The Canon of the Christian Bible in History and Theology, The Liturgical Press, Minnesota 1995.

FULLER, Reginold C., and others A New Catholie Commentary on Holy Scripture, Thomas Nelson, New York, 1975.

The Pontifical Biblical Commission, "The Interpretation of the Bible in the Church", Citta del Vaticano, 1993.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரின் நாள்

[திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் கத்தோலிக்க திருச்சபையின் ஆயர்கள், குருக்கள், இறைமக்களுக்கு ஆண்டவரின் நாளை (ஞாயிறு தினம்) தூயதாக வைத்திருப்பது பற்றி வெளியிட்ட அப்போஸ்தலிக்க மடல். "டீயெஸ் டோமினி" (Dies Domini) ஆண்டவரின் நாள்.]

தமிழில் சுருக்கம்: அருள்திரு S. B. V. மங்களறாஜா

## முன்னுரை:

மடல் எழுதப்பட்டதன் நோக்கம்: சமுதாயத்தில் ஏற்பட்டு வரும் பல்வேறு மாற்றங்கள் பெருமதியான, பாரம்பரியமாகப் பேணப் பட்டு வரும் ஞாயிற்றுக்கிழமையை புனித நாளாக பேணுதலிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஞாயிற்றுக்கிழமையை உள்ளடக்கியுள்ள 'வார இறுதி' நாட்கள் பல்வேறு அரசியல், விளையாட்டு, கலாச்சார, களியாட்டங்களுக்கென ஒதுக்கப்படுகின்றன. இதுபோன்ற செயற்பாடுகளிலும் நன்மைகள் இல்லாமலில்லை. எனினும் ஞாயிறு தினத்தின் ஆன்மீக நலன்கள் எப்போதும் பேணப்படவேண்டியவையே. பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலினால் பெற்ற ஆன்மீக முதிர்ச்சியைக் கொண்டு கிறிஸ்தவர்கள் ஞாயிறு தினத்தின் புனிதத்தன்மையைப் பேணவேண்டும். அதேவேளையில் வார இறுதியை (பணியின் பின்) ஓய்வின் காலமாகவும் இவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

நடைமுறையில் சில இடங்களில் ஞாயிறுதினம் ஒரு புனித தினமாகப் பேணப்படும் அதேவேளையில் வேறு சில இடங்களில் பல்வேறு சமூக மாற்றங்களால் ஞாயிறு வழிபாடுகளில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கையும் குறைகிறது. இத்தினத்தின் புனிதத்தன்மையும் பேணப்படுவதாக இல்லை.

இப்பின்னணியில் திருச்சபையின் நீண்ட பாரம்பரியத்தை நினைவில் கொண்டு ஞாயிறு தினத்தின் புனிதத்தன்மையை 2ஆம் வத். சங்க ஏடு தி. வ (S. C. 106) சுட்டிக்காட்டுவது போல இந்நாளில் முக்கியத்துவத்தை, கோட்பாட்டு அடித்தளத்தை விளக்குவதன் மூலம் நிலைநாட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருங்கக்கூறின் இத்திருமுகம் எழுதப்பட்டதன் நோக்கம் என்ன வெனில் ஞாயிற்றுக்கிழமையின் புனிதத்துவம் மங்கிவரும் இவ்வேளையில் திரும்பவும் இந்நாள் ஆண்டவரின் நாள் என்னும் உண்மையையும், ஆண்டவர் இந்நாளைத் தமது அன்பின் கொடையாகத் தந்துள்ளார் என்பதையும் வலியுத்துவதாகும்.

மூன்றாம் ஆயிரமாம் ஆண்டின் ஆரம்பமும் இம்மடலை எழுதத் தூண்டிய காரணிகளும்: மூன்றாம் ஆயிரமாம் ஆண்டின் ஆரம்பம் கிறிஸ்துவின் ஒளியில் வரலாற்றுப்பாதையை நோக்க உதவுகின்றது. அதேவேளையில் ஆண்டவரின் நாளாகிய ஞாயிறு தினத்தின் மறைபொருட் சிறப்பையும், அன்றைய நிகழ்வுகளின் சிறப்பையும் கிறிஸ்தவ விசுவாச வாழ்வுக்கும் அன்றாட மனித வாழ்வுக்கும் இந்நாள் அளிக்கும் பங்களிப்பையும் இறைமக்கள் சிந்திக்க இந்த புதிய சகாப்தம் அழைக்கின்றது.

2ஆம் வத். சங்கம் முடிவடைந்ததிலிருந்து ஆயர்களும், குருக்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் 'ஆண்டவரின் நாளின்' சிறப்பை வலியுறுத்தத் திட்டங்கள் வகுத்துச் செயலாற்றி வந்துள்ளமை திருத்தந்தைக்கு மகிழ்ச்சியளித்துள்ளது. மாபெரும் 2000மாம் ஆண்டு ஜூபிலியின் நுழைவாயிலில் நிற்கும் போது அனைத்து ஆயர்களதும், குருக்களதும் மேற்குறிப்பிட்ட முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் முகமாகத் திருத்தந்தை இவ்வப்போஸ்தலிக் மடலை வரைகின்றார். இறைமக்கள் அனைவரும் ஒவ்வொரு ஞாயிறும் "ஆண்டவரின் தின" நற்கருணைக் கொண்டாட்டத்தில் தத்தம் ஆயர்களுடன் இணைந்து இருக்கும் போது தாமும் ஆன்மீக ரீதியில் அவர்களுடன் இருக்கின்றார் எனத் திருத்தந்தை நினைவூட்டுகின்றார்.

## அதிகாரம் 1

## ஆண்டவரின் நாள் (தந்தை இறைவனின் நாள்)

## படைத்தவரின் (படைப்புப்) பணியின் கொண்டாட்டம்

## "அனைத்தும் அவரால் உண்டாயின" (யோவான் 1-3)

உயிர்த்த கிறிஸ்துவின் நாளாகிய ஞாயிறு 'புதிய படைப்பின்' விழாவாக நினைவு கூரப்பட்டு கொண்டாடப்படுகிறது. விவிலியத்தின் துவக்கத்தில் தரப்பட்டுள்ள படைப்பின் வரலாறு மேற்குறிப்பிட்ட 'புதிய படைப்பு'டன் தொடர்பு கொண்டுள்ளது. என்றென்றும், வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் மகனாகிய 'வார்த்தை' தான் உலகில் ஆரம்பமும் முடிவும். படைக்கப்பட்ட உலகில் என்றும் இருக்கும் மகனின் பிரசன்னம் (பாஸ்கா மறைபொருள்வழியாக வெளிப்படுகின்றது. உலக படைப்பின் வரலாற்றில் ஏழாம் நாளுக்கு ஆவி வழங்கப்பட்டு புனிதப்படுத்தப்பட்டமையால் (தொ, நூ. 23/3) கிறிஸ்து மைய எதிர்ப்பார்ப்பு பிரசன்னமாயிருந்தது தெளிவாகின்றது. முதல் உடன் படிக்கையின் 'சபத்' எனப்படும் 'ஓய்வு நாள்' புதிய உடன் படிக்கையின் புனித நாளை முன் சுட்டி நிற்கிறது. பழைய ஏற்பாட்டில் கடவுளின் ஓய்வு (தொ. நூ. 2/2) கடவுள் தமது மக்கள் வாக்குப்பண்ணப்பட்ட பூமிக்குச் சென்ற போது அவர்களுக்கு வழங்கிய ஓய்வு (வி. ப. 33/14) போன்றவை கிறிஸ்து தனது உயிர்ப்பினால் பெற்ற ஓய்வுக்கு (எபிரே. 4/9) ஒரு முன் அடையாளம். (இல. 8)

## தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தார்: (தொ. நூ. 1/1)

தொடக்க நூலில் விளக்கப்பட்டுள்ள படைப்பின் வரலாறு ஆன்மீகப் பெறுமதி நிறைந்தது. அடிக்கடி வரும் 'கடவுள் அது நல்லதெனக் கண்டார்' (தொ. நூ. 1/10, 12) எனும்வசனம் பாவத்தால் மாசு படிந்த நிலையிலும் புது வாழ்வுக்கான ஒரு நம்பிக்கையைத்தருவ உள்ளது.

கடவுளின் உலகப் படைப்பு முடிவடைந்தமை மனிதன் அதன் மேல் கட்டியெழுப்புவதற்கு இடமளிக்கின்றது. கடவுள் ஏழாம் நாள் ஓய்வெடுப்பது (தொ. நூ. 2/2) கடவுளின் செயற்பாட்டை ஒரு மனித செயற்பாடாகக் காட்டி படைத்தவருக்கும் படைப்புப் பொருட்களுக்குமிடையே மறைபொருளாயுள்ள உறவைச் சுட்டிக்காட்டுகிறது. திருச்சபையின் படிப்பினைகளின்படி மனிதன் கடவுளுடன் உடன் உழைப்பாளியாக அழைக்கப்படுகின்றான். எல்லாவற்றுக்கும் மூலகர்த்தா கடவுள் என்பதை மனதிலிருத்தி உலகை அடக்கி ஆளவும் அழைக்கப்படுகின்றான் (எண் 2 வதி. சங். இ. உ, தி. இல. 34 கூறுகின்றது)

## 'சபத்'-படைத்தவரி (கடவுள்) ன் மகிழ்ச்சி நிறை ஓய்வு:

'உழைப்பு' உன்னதமானதாகவும் எப்போதும் நடைபெறும் ஒன்றாகவும் சித்தரிக்கப்படுவது போல (யோவான் 5/17) 'ஓய்வு' நேரமும் உழைப்பின் பலனை ஆழ்ந்து தியானிக்க உதவுவதால் முக்கியத்துவம் வாய்ந்தது. கடவுளின் சாயலாகவும் படைப்பிற்கெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமுடியாகவும் உள்ள மனிதனுக்கு 'உழைப்பும்' 'ஓய்வும்' விசேட முக்கியத்துவம் வாய்ந்தவை. இதில் கடவுளுடன் ஒரு அன்பின் உடன்படிக்கை செய்வதற்கு மனிதனுக்கு அழைப்புவிடப்படுகின்றது. இஸ்ராயேல் மக்களுடன் செய்யப்பட்டு கிறிஸ்துவில் நிறைவு பெற்ற இந்த உடன்படிக்கை வழியாக மனுக்குலம் முழுவதற்கும் மீட்பு வழங்கப்படுகின்றது.

## கடவுள் ஏழாம் நாளுக்கு ஆசிவழங்கி, அதைப் புனிதப் படுத்தினார்: (தொ. நூ. 2/3)

ஞாயிறு தினத்திற்கு ஆயத்தம் செய்ய 'சபத்' கட்டளை உள்ளது என்பது கடவுளின் திட்டத்தில் தெளிவாக வெளிப்படுகின்றது. இதனால் தான் 'பத்துக் கட்டளைகளிலும்' இதற்கொரு தனியிடம் உள்ளது இந்தக்கட்டளை அம்மக்கள் சமூகமாக அனுசரிக்கவேண்டிய கட்டளை மட்டுமன்றி கடவுளுடன் உள்ள ஆழமான உறவின் வெளிப்பாடாகவுமுள்ளது. இக்கட்டளை இதனால்தான் உழைப்புக்குப் பின் ஓய்வுஎன்ற இயற்கை நியதியிலும் ஆழமான கருத்துடன் விளங்குகின்றது.

இந்தஓய்வுநாள்இதனால் கடவுளால் ஒரு'புனிதநாளா'க்கப்பட்டு ஆண்டவரின் நாள்' எனப்படுகின்றது நேரம் இடம் எல்லாமே கடவுளுக்கே சொந்தமானதால் எல்லா நாட்களும் கடவுளுடையவைவே.

'ஆண்டவரின் நாள்' எனப்படும் ஓய்வுநாள் கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள அன்புறவை செபத்தினால் ஆழமாக்க வழிவகுக்கின்றது. 'உழைப்பில்' இருந்து சற்று ஒதுங்கி ஒய்வெடுப்பது மனிதனும் உலகமும் கடவுளில் தங்கியிருப்பதை வெளிப்படுத்துகின்றது. இவ்வுணர்வு மனிதன் கடவுளுடன் உடன் படைப்பாளி எனும் உண்மையைச் சரியாக புரிந்து கொள்ளத் துணை புரிகின்றது.

## ''நினைவு கூர்வதன்' வழியாக (இந் நாளை) புனிதமாக வைத்திருத்தல்:

இந்நாளைப் புனித நாளாக வைத்திருப்பதற்கு உதவியாக கடந்தகால நிகழ்வுகள் சிலவற்றை நினைவுகூர அழைப்பு விடுக்கப்படுகின்றது, கடவுளின் மாபெரும் படைப்புப்பணியும் பின் அவர் ஓய்வெடுத்தமையும் நினைவுபடுத்தப்படுகின்றன. (தி. ப. 20/8-11). இத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் கடவுள் ஓய்வெடுத்ததுபோல மனிதனும் ஓய்வெடுக்க அழைக்கப் படுகின்றான் என்பது மட்டுமல்ல மகன் தந்தை உறவு போன்றதும் கணவன் மனைவி உறவு போன்றதுமான தொரு உறவு கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே ஏற்படவும் வகை செய்யப்படுகின்றது. இஸ்ராயேல் மக்கள் எகிப்தியருடைய அடிமைத் தளைகளிலிருந்து விடுவிக்கப்பட்டபோது கடவுள் செய்த வியத்தகு செயல்களும் நினைவுகூரப்படுகின்றன (இ. ச. 5/12-15).

நினைவு கூரப்படும் மேற்குறிப்பிட்ட இரு நிகழ்வுகளும் படைப் பையும் மீட்பையும் சுட்டிக்காட்டுகின்றன.

## சபத்' ஓய்விலிருந்து 'ஞாயிறு' ஓய்விற்கு:

'சபத்' ஓய்விலிருந்து ஞாயிறு ஓய்விற்கு கடந்து செல்வது கடவு வின் படைப்புப் பணி நிறைவிலிருந்து கிறிஸ்துவின் மீட்புப்பணிக்குக் கடந்து செல்வதையும் அங்கிருந்து இறுதிக்கால நிறைவு அல்லது கிறிஸ்து வின் இரண்டாம் வருகையில் முழுமை பெறுவதையும் சுட்டிக் காட்டுகின்றது.

அதிகாரம் 2

# கிறிஸ்துவின் நாள்

## உயிர்த்த ஆண்டவரின் நாளும் பரிசுத்தஆவியின் நன்கொடையும் வாராந்த உயிர்ப்பு நாள் (ஈஸ்டர்):

மேற்கத்தைய கிழக்கத்தைய திருச்சபையின் பாரம்பரியங் களும் திருச்சபைத் தந்தையரதுகூற்றுக்களுக்கு அமைய ஞாயிறுதினமாகிய உயிர்த்த ஆண்டவரின் நினைவு வாராந்த வழிபாடுகளுக்கெல்லாம் நடுநாயகமாக விளங்குகின்றது என்பதற்குச் சான்றுகளாகும்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு மட்டுமல்ல (மாற். 16/2-9; லூக். 24/1 யோவான் 20/1) ஆதித் திருச்சபையின் வேறு சில முக்கிய நிகழ்வுகளும் இந்நாளிலேயே நிகழ்ந்தன. உ+ம் எம்மாவுஸ் சந்திப்பு (லூக். 24/13–35) பதினொரு சீடர்களைச் சந்தித்தல் (லூக். 24/36; யோவான் 20/19), பெந்தக்கோஸ்தே தினம் (தி. தூ. ப. 2/1). போன்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரத்தின் முதல்நாள்:

மேற் குறிப்பிட்ட காரணங்களால் கிறிஸ்துவின் சீடர்களுடைய வாழ்க்கை முழுவதும் இம்முதல் நாளை மையமாகக் கொண்டு திட்ட மிடப்படலாயிற்று (1 கொரி. 16/2). இம் முதல் நாளைக் கொண்டாடு கின்றமை கிறிஸ்தவர்களை சூழவுள்ளவர்களிடமிருந்து தனித்துவமான வர்களாக்கியது. ஆண்டவரின் நாளைக் கொண்டாடுகிறமையால் 'யேசுக்கிறிஸ்து தான் ஆண்டவர்' என்பதை அறிக்கையிடுபவர்களாகவும் இவர்கள்விளங்கினர் (பிலிப். 2/11; தி. தூ. ப. 2/36; 1கொரி. 12/3).

ஆதித்திருச்சபையில் முதலிலே அப்போஸ்தலர் 'சபத்' ஓய்வுதின அனுசரிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்ததை (தி. தூ. ப. 12 : 27) அவ தானிக்கலாம். சில சமூகங்களில் 'சபத்' ஓய்வு தினமும் அதேவேளை யில் ஞாயிறு ஓய்வு தினமும் அனுசரிக்கப்பட்டன. ஆனால் படிப்படி யாக புனித அந்தியோக்கியா இஞ்ஞாசியாரும், அகுஸ்தீனாரும் குறிப்பிடுவது போன்று ஆண்டவரின் நாளாகிய ஞாயிறு தினம் முக்கியத்துவம் பெறத்தொடங்கியது.

## புதிய படைப்பின் நாள்:

உலகப் படைப்பை வாரத்தின் (தொ. தூ. 1/1–2/2) முதல் நாளுடன் இணைத்துப் பார்க்குமிடத்து ஆண்டவரின் உயிர்ப்பு ஒரு புதிய படைப்பைச் சுட்டிக்காட்டுகின்றது. உயிர்ப்பு ஒரு புதிய படைப்பின் ஆரம்பமாகவுள்ளது (கொலோ. 1/15, 17). ஞாயிறு தினங்களில் குறிப்பாக உயிர்ப்பு ஞாயிறுத் திருவிழிப்பு அன்று பரிந் துரைக்கப்படும் திருமுழுக்கு உயிர்த்த யேசுவில் புதுப்பிறப்படைவதை நினைவுறுத்துகின்றது.

## ஒளியாகிய கிறிஸ்துவின் நாள்:

அந்நாளில் பிரபல்யமாயிருந்த சூரிய வணக்கம் என்னும் தாக்கத்திலிருந்து கிறிஸ்தவர்களை விடுவிப்பதற்காக 'சூரியனின் நாள், என்றிருந்த இந்நாளின் ரோமைய பெயர் கிறீஸ்தவ மயமாக்கப்பட்டு அப்படியே சில மொழிகளிலும் வழங்கப்பட்டுள்ளது. கிறீஸ்து புதிய சூரியனாக உலகின் புதிய ஒளியாக (யோவான் 9/5; 1/4–5, 9) சித்தரிக்கப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுத்த ஆவி கொடையாக வழங்கப்பட்டதன் நாள்:

ஞாயிறு தினம் கிறீஸ்து-ஒளியின் நாளாக இருப்பதுபோலவே பரிசுத்த ஆவி—நெருப்பின் நாளாகவும் உளது. யேசு அப்போஸ்தலர் மீது ஊதி பரிசுத்த ஆவியைப் பெறச் செய்தல் (யோவான் 20/20—23) உயிர்ப்பின் ஐம்பதாம் நாள் (பெந்தக்கோஸ்தே) பரிசுத்த ஆவி அவர்கள் மீது இறங்குதல் (தி. தூ ப. 2/2—3) ஆகியவை ஞாயிறு தினங்களின் நிகழ்வுகள். இவை ஞாயிறு தினத்தை வாராந்த உயிர்ப்பு நாளாக மட்டுமல்ல வாராந்த பரிசுத்த ஆவியின் நாளாக (பெந்தக்கோஸ்தே) வும் ஆக்குகின்றன.

அதிகாரம் 3

# திருச்சபையின் நாள்

## நற்கருணைப்பலி ஒன்று கூடல் — ஞாயிறு தினத்தின் இதயம்

## உயிர்த்த ஆண்டவரின் பிரசன்னம் நற்கருணைப்பலிக் குழுமத்தில்:

ஞாயிறு தினத்தின் இதயமாக விளங்குவது நற்கருணைப்பலியை ஒப்புக்கொடுக்கும் குழுமம் ஆகும், தனிமனிதர்களை விட இறைமக்கள் கூட்டத்தில் அல்லது மறையுடலின் முழு உறுப்பினர்களில் உயிர்த்த யேசுவின் பிரசன்னம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

உயிர்த்த யேசு காட்சி கொடுத்த அப்போஸ்தலர் குழுமம் எல்லாக்காலத்திலும் எல்லா இடங்களிலும் வாழ்ந்த வாழவிருக்கும் இறைமக்கள் கூட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. உயிர்த்த யேசு காட்சியளித்தமைக்கும் நற்கருணைக்குமிடையிலான நெருங்கிய தொடர்பு எம்மாவுஸ் சென்ற சீடர்களின் அனுபவத்திலிருந்து தெளிவாகின்றது (லூக். 24/30—31).

## ஞாயிறு தின நற்கருணைப்பலியின் சிறப்பு:

அடிப்படையில் ஞாயிறு தினத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் நற்கருணைப்பலியும் வாரநாட்களில் ஒப்புக்கொடுக்கப்படும் பலியும் ஒன்றாகவேயிருப்பினும் ஞாயிறு தினம், கிறிஸ்து சாவை வெற்றிகொண்ட தினமாதலால் அன்று ஒப்புக்கொடுக்கும் பலி அதுவும் ஆயர் தலைமை தாங்க குருக்கள் கூட்டத்துடன் இறைமக்கள் புடைசூழ ஒப்புக் கொடுக்கப்படும் பலி திருச்சபையின் பலியாகச் சிறப்புப் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சபையின் நாள்:

ஆண்டவரின் நாள் திருச்சபையின் நாளாகவுமிருப்பதால் நற்கருணைப்பலி நிறைவேற இறைமக்கள் கூட்டம் கட்டாயம் இருக்க வேண்டும். (2ஆம் வத். சங். ஏடு; தி. ப. 42). ஞாயிறு தினம் ஆயர், குருக்கள், இறைமக்கள் சேர்ந்து ஒப்புக்கொடுக்கும் நற்கருணை ஒற்றுமையின் அருட்சாதனத்தை பிரதிபலிக்கின்றது. இங்கு ஒவ்வொருவரும் மற்றெல்லாருடனும் ஆழமான விதத்தில் பகிரவும் எல்லோரும் ஒன்றாக தந்தை, மகன், பரிசுத்த ஆவியுடன் ஒன்றித்திருக்கவும் ஏதுவாகின்றது. இதனால் ஞாயிறு தினத்தில் குழுத்திருப்பலிகள் பொருத்தமானவை யல்ல.

## சகோதரத்துவ விருந்தும் 'அனுப்பப்படுதலும்':

ஞாயிறுதின நற்கருணைக் கொண்டாட்ட அனுபவ இறைமக்களிடையே சகோதரத்துவத்தை வளர்க்கும் அனுபவம் (1 கொரி. 11/27–32) மட்டுமன்றி ஆண்டவரின் சீடர் நற்கருணையை உட்கொண்டபின் உலகெங்கும் நற்செய்தியை அறிவிக்கச்சென்றதுபோல இறைமக்களும் நற்கருணை விருந்தின் பின் உயிர்த்தயேசுவைச் சந்தித்த மகிழ்வைத் தம் சகோதர சகோதரிகளுடன் பகிரச் செல்லவேண்டும் (லூக். 24/33–35).

## ஞாயிறு கடன் திருநாள்:

திருச்சபையின் ஆரம்ப காலத்திலிருந்து இறைமக்கள் ஆண்டவரின் தினத்தை அனுசரிக்கும்படி தூண்டப்பட்டு வந்துள்ளனர். பலர் இதற்காகத் தம் இன்னுயிரையும் ஈந்துள்ளனர். ஆரம்பத்தில் ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றுதல் ஒரு கட்டாய சட்டமாக இல்லாவிடினும் காலப்போக்கில் இதனை ஒரு சட்டமாக்கவேண்டிய தேவையேற்பட்டது. 1917ல் வெளியான திருச்சபைச்சட்டத்திலும் பின் 1992ல் வெளியான கத்தோலிக்க மறைக்கல்வி நூலிலும் இது ஒரு கட்டாயச்சட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இன்றும் கலாபனைக்காலத்தில் நிகழ்ந்ததைப் போன்று பலர் பல இடங்களில் பல தடைகளையும் எதிர்கொண்டு ஞாயிறு தின்க்கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

## நற்கருணைப்பலி தவிர்ந்த ஞாயிறுதின நிகழ்வுகள்

ஞாயிறு தினத்தின் இதயமாக நற்கருணைப்பலி விளங்கினும் அத்துடன் வேறு சில செயல்பாடுகளால் அன்றைய தின மகிழ்ச்சியும் அமைதியும் புனிதத்துவமும் மேலும் மெருகேறுகின்றன. குடும்ப வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் பெற்றோர் பிள்ளைகள் ஒன்றுகூடி ஒருவர் ஒருவருக்கு செவிசாய்த்தல், சமூக உறவுப் பரிமாற்றங்கள், பயன்தரும் வகையில் செலவழிக்கப்படும் ஓய்வுநேரங்கள் போன்றவற்றால் உயிர்த்த ஆண்டவரின் மகிழ்ச்சி வெளிப்படுத்தப்படலாம். அன்றைய நற்கருணைபலிப் மேலும் நிறைவுபெற விசேட வேண்டுதல்கள், மறைக்கல்வி வகுப்புக்கள், சில வணக்கத்தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்ளல் போன்றவை பயன் தரும்.

அதிகாரம் 4

## மனிதனின் நாள்

### ஞாயிறு—மகிழ்ச்சி, ஓய்வு நட்புறவின் நாள்

### கிறிஸ்துவின் நிறை மகிழ்ச்சி:

ஞாயிறு தினம் ஒரு மகிழ்ச்சியின் தினம். மகிழ்ச்சியின் வெளிப்பாடாக செபங்கள் எழுந்து நின்று சொல்லப்படுகின்றன. யேசு தனது பாடுகளின் பின் வரும் உயிர்ப்பைப்பற்றிக் குறிப்பிடும்போது 'நீங்கள்' துயருறுவீர்கள்; ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும் (யோவான் 16/20) என்கிறார். ஞாயிறு தின நற்கருணைப்பலி வெளிப்படுத்தும் 'திருவிழாக்கால மகிழ்ச்சி' கிறிஸ்து திருச்சபைக்கு வழங்கும் ஒரு கொடை. இம்மகிழ்ச்சி பரிசுத்த ஆவியின் கனிகளுள் ஒன்று. (ரோமர். 14/17; கலாத். 5/22)

கிறிஸ்தவ மகிழ்ச்சி ஒரு நாளுக்கு மட்டும் உரித்தானதல்ல. இது எல்லா நாட்களையும் வாழ்க்கை முழுவதையுமே ஆட்கொள்கிறது. புனிதர்கள் சாட்சியம் கூறுவதுபோல இம் மகிழ்ச்சி கஷ்டங்கள் துன்பங்கள் மத்தியிலும் நிலைத்து நின்று ஆறுதல் தருவதாக உள்ளது.

### 'சபத்' தினத்தின் நிறைவு:

பழைய ஏற்பாட்டில் விளக்கப்படும் படைப்புப் பணியும் பின் இஸ்ராயேல் மக்கள் எகிப்தியரின் அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெறும் நிகழ்வும் கிறிஸ்துவின் மரணம் உயிர்ப்பினால் மேற்கொள்ளப்பட்ட உலக மீட்பில் புதியதொரு படைப்பாக நிறைவு பெறுகின்றது. இதனால் பழைய ஏற்பாட்டு 'சபத்' ஓய்வு புதிய ஏற்பாட்டு கிறிஸ்துவின் உயிர்ப்பு 'ஓய்வு நாளினால்' நிறைவு பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் தமது படைப்புப்பணி முடிந்ததும் ஏழாம் நாளுக்கு ஆசி வழங்கி அதைப் புனிதப்படுத்தினார். 'சபத்' படைப்பு முடிவடைந்ததைக் குறிக்கின்றது. இது ஆறாம் நாள் கடவுள் தமது உருவிலும் சாயலிலும் மனிதனைப்படைத்ததுடன் (தொ. நூ. 1/26) இணைத்தே தரப்படுகின்றது. இது 'கடவுளின் நாளுக்கும்' மனிதனின் நாளுக்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டுகின்றது. இத்தொடர்பை புனித அப்புறோஸ் வானம், நட்சத்திரங்கள், சந்திரன், சூரியன் ஆகியவற்றைப் படைத்து ஓய்வு காணாத இறைவன் மனிதனைப் படைத்தும் அவனுக்கு மட்டுமே தாம் பாவ மன்னிப்பு வழங்க முடியுமாகையால் ஓய்வெடுப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

கிறிஸ்து ஓய்வுநாட்களில் பல நோயாளிகளைக் குணப்படுத்தியமை (மத். 12/9-14) அவர் ஓய்வு நாள் சட்டத்தை மீறினார் என்றில்லாது 'விடுதலையளித்தல்' வழியாக அவர் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராக இருப்பதால் (மாற். 2/28) ஓய்வுநாளுக்கிருக்கும் விடுதலையளிக்கும் பண்பை நிலைநாட்டுகிறார்.

## ஓய்வுநாள்:

ஞாயிறு தினம் ஒரு வழிபாட்டு தினமாக மட்டுமன்றி ஒரு ஓய்வு நாளாகவும் அனுசரிக்கப்பட்டு வந்துள்ளது கி. பி. 321 இல் சக்கரவர்த்தி கொன்ஸ்ரன்ரைன் இது பற்றி பிரகடனம் வெளியிட்டமையிலிருந்து ரோம சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்த பின்னும் தொடர்ந்து ஞாயிறு தினம் ஒரு ஓய்வு நாளாக அனுசரிக்கப்பட வேண்டுமெனத் திருச்சபை வலியுறுத்தி வந்துள்ளது.

உழைப்பும் ஓய்வும் மாறி மாறி வருவது இயற்கையே, விவிலியம் இதற்குச் சான்று பகர்கின்றது (தொ. நூ, 2/2-3; வி. ப, 20/8-11) ஓய்வின்றி மனிதன் உழைத்துக்கொண்டேயிருந்தால் படைத்த இறைவனில் தான் எல்லாம் தங்கியிருக்கின்றது என்பதை மனிதன் மறக்கக் கூடிய ஆபத்துண்டு. ஏனெனில் உழைப்பிலிருந்து சற்று ஓய்ந்திருக்கும் போதுதான் மனிதன் எல்லாம் இறைவனின் கைவண்ணம் என்ற உண்மையை உணர்கின்றான்.

காலப்போக்கில் திருச்சபையில் ஞாயிறு ஓய்வைப்பற்றிய சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டன. இது தொழிலாளரின் வேலைப்பழுவை குறைக்க வேண்டுமென்பதற்காகவேயன்றி உழைப்பும் ஓய்வும் ஞாயிறு தின ஆன்மீக செயற்பாடுகளிலும் முக்கியத்துவம் குறைந்தவை என்பதற்காகவல்ல, மக்களின் வேலைப்பழுவைக் குறைத்து இந்நாளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயதாக்க வேண்டு மென்பதற்காகத்தான் திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர் 1891 இல் 'றேறும் நெவாறும்' எனும் தமது தொழிலாளர் உரிமைகள் பற்றிய சுற்று மடலில் ஞாயிறுதின ஓய்வு என்பது ஒவ்வொரு அரசும் மதிக்க வேண்டிய தொழிலாளரின் உரிமை என்று குறிப்பிடுகிறார்.

ஞாயிறு ஒய்வு தினம் இவ்வுலக காரியங்களைவிட ஆன்மீக விடயங்களைப்பற்றி அக்கறைகொள்ள நம்மைத் தூண்டுகின்றது; அத்துடன் நற்கருணைப் பகிர்விலும் மேலும் அர்த்தமுள்ள விதத்தில் பங்கு கொள்ளவும் துணைசெய்கிறது.

## மனித நேயத்தின் நாள்:

இந்நாளில் சிறப்பாக ஒருவரையொருவர் அன்பு செய்யத் தூண்டும் கிறிஸ்துவின் புதிய கட்டளை (யோவான் 15/10 - 12) க்குச் செயல் வடிவம் கொடுக்கும் பிறரன்புப் பணிகள் சிறப்பிடம் பெற வேண்டும்.

இருப்பதை இல்லாதோருடன் பகிர்தல் (1 கொரி. 16/2) 'அன்பு விருந்து' வேளைகளில் உண்மையான சகோதரத்துவத்தை வளர்த்தல் (1 கொரி. 11/20-22), எல்லோரையும் சமமாக மதித்தல் (யாக. 2/2-4) ஆகிய செயல்கள் சிறப்பிடம் பெறவேண்டும். ஞாயிறு நற்கருணைப் பலியிலிருந்து அன்பு பாய்ந்தோடுகின்றது. நோயாளர், முதியோர், அகதிகள் போன்றோர் ஞாயிற்றுக் கிழமைகளில் தம் தனிமையைக் கூடுதலாக உணர்கின்றனர். இவர்களுக்குக் கிரமமான முறையில் ஆறுதல்தரக்கூடிய பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அதிகாரம் 5

## நாட்களிலெல்லாம் தனிச்சிறப்பு வாய்ந்த நாள்

## ஞாயிறு-காலத்தின் அர்த்தத்தை வெளிப்படுத்தும்

## முதன்மைத் திருநாள்

## கிறிஸ்து காலத்தின் முதலும் முடிவும்:

ஒரு காலவரையறைக்குள் தான் உலகப்படைப்பு, மீட்பின் வரலாறு கருவாதல், வார்த்தை மனுவுருவாதல் போன்ற நிகழ்வுகளும் இனி நிகழவிருக்கும் கிறிஸ்துவின் இரண்டாம் மகிமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகையும் அமைகின்றன. இதனால் காலம் கிறிஸ்தவத்திற்கு முக்கியமானது என்பது தெளிவு. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து காலங்களுக்கெல்லாம் நடுநாயகமாகவுள்ளார் என்பது உயிர்ப்புத் திருவிழிப்பு வழிபாட்டின் போது அவர் முதலும் முடிவுமாகக் குறிப்பிடப்படுவதால் ஞாண்பிக்கப்படுகின்றது.

ஞாயிறு தினம் வாராவாரம் கொண்டாடப்படும் உயிர்ப்பு விழாவாக உள்ள அதே வேளையில் சாதாரணமாகக் காலத்தைக் கணிக்கும் மாதங்கள், வருடங்கள், நூற்றாண்டுகள் போன்ற முறைகளையெல்லாம் ஊடறுத்து ஏற்கனவே கிறிஸ்துவின் உயிர்ப்பினால் முன்னறிவிக்கப்பட்ட அவரது இரண்டாம் வருகையைச் சுட்டிக் காட்டி நிற்கிறது. திருச்சபை, உலகம் அத்துடன் வரலாறு முழுவதும் உயிர்த்து மகிமை பெற்ற கிறிஸ்துவினால் வழிநடத்தப்படுகின்றன.

## திருவழிபாட்டு ஆண்டில் ஞாயிறு

திருச்சபையின் முக்கிய விழாக்கள் யூதர்களது வருடாந்த திருநாட்களாகிய பாஸ்காவுடனும் பெந்தக்கோஸ்தேயுடனும் தொடர்பு கொண்டுள்ளன. 2ஆம் நூற்றாண்டிலிருந்து வாராவாரம் ஞாயிறு தினங்களில் கொண்டாடப்படும் உயிர்ப்பு விழாவுடன் 40 நாள் தப ஆயத்தத்துடன் கொண்டாடப்படும் வருடாந்த உயிர்ப்பு விழாவும், இதன் 50 நாட்களின் பின் திருச்சபையின் பிறப்பையும் அப்போஸ்தலரது பணி ஆரம்பத்தையும் குறிப்பிடும் பெந்தக்கோஸ்தே விழாவும் கொண்டாடப்பட்டு வரலாயின.

முழுத்திருவழிபாட்டு ஆண்டையும் நோக்கும் போது 2ஆம் வத். சங்க ஏடு தி. வ. 102 குறிப்பிடுவது போல வார்த்தை மனுவுருவாதல், உயிர்ப்பு, விண்ணேற்றம், பெந்தக்கோஸ்தே, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஆவலுடன் காத்திருத்தல் ஆகிய அம்சங்கள் அதனுள் அடங்கியிருப்பதை நோக்கலாம்.

## முடிவுரை

அர்த்தமுள்ள விதத்தில் அனுசரிக்கப்படும் ஞாயிறு தினம் கிறிஸ்தவ வாழ்வின் சாரமாகவும் அதனை நன்கு வாழ்வதற்கான உந்து சக்தியாகவும் உளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர் இறைவனுக்குச் செலுத்தும் வழிபாட்டின் நிறைவு நற்கருணை வழிபாடு. இதுவும் ஒரு ஞாயிறு தினத்தில் சமூகம் முழுவதும் ஒன்று கூடி இதை நிறைவேற்றுவது தனிச்சிறப்பு வாய்ந்தது.

கிறிஸ்தவர்கள் ஞாயிறு தினத்தை உரிய ஆன்மீக மதிப்பீடுகளுடன் அனுசரிக்கும் போது குறிப்பாக ஓய்வு நேரங்களைப் பயனற்ற கேளிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்தப் பல சக்திகள் செயல்படுகின்றன. எனவே ஞாயிறு தினம் முழுவதையும் 'ஆண்டவரின் நாள்' ஆகச் செலவழிக்க ஆவன செய்யப்படவேண்டும். ஞாயிறு தினம் மற்றைய தினங்களுக்கு ஆன்மாவாகவும் வழிகாட்டியாகவுமுள்ளது.

இன்று பல்வேறு இடங்களிலும் பரவி சிதறி வாழும் கிறிஸ்தவர்கள் ஒன்று சேர்ந்த தமக்கிடையே சகோதரத்துவத்தை வளர்க்க ஞாயிறு தினம் களம் அமைத்துக் கொடுக்கவேண்டும்.

ஞாயிறு தினம் செபத்தின், மகிழ்ச்சியின் நாள், சகோதரிடையே நட்புறவை வளர்க்கும் ஒரு நாள். உயிர்த்த யேசுவை நினைவு கூரும் போது ஆண்டவரின் இரண்டாம் வருகையை 'மாரனாத்தா' (1 கொரி 16/22) எதிர்பார்த்திருக்கவும் அழைப்பு விடுக்கப்படுகின்றது. ஒருஞாயிறு தினத்திலிருந்து அடுத்த ஞாயிறு தினத்திற்குக் கடந்து செல்வது விண்ணக ஜெருசலேம் ஆகிய முடிவில்லா ஞாயிறு தினத்திற்குச் செல்வதன் ஒரு அங்கமே. இப்பயணத்தில் திருச்சபை பரிசுத்த ஆவியினால் ஊட்டமளிக்கப்படுகின்றது. திருச்சபை ஆரம்பித்த முதல் நாளிலிருந்தே இப் பரிசுத்த ஆவி திருச்சபையில் குடிகொண்டிருப்பினும் ஞாயிறுநற்கருணை ஒன்றுகூடலில் திருச்சபை பரிசுத்த ஆவிக்கு விசேட விதமாகச் செவிசாய்க்கின்றது.

கன்னிமரியாள் திருச்சபையில் குறிப்பாக ஞாயிறு தினத்தில் இருக்கின்றாள். அவள் இறைவனின் தாயாகவும் திருச்சபையின் தாயாகவுமிருப்பதால் கட்டாயமாக அவளது பிரசன்னம் இந்த ஆண்டவரின் நாளிலும் திருச்சபையின் நாளிலும் உள்ளது. அவளுடைய முன்மாதிரிகை பின்பற்றப்படவேண்டிய தொன்று (லூக். 2/19,50) என்பது ஞாயிறு வழிபாட்டு ஒன்று கூடலில் வலியுறுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தந்தை வரவிருக்கும் மாபெரும் 2000 ஆம் ஜூபிலியை யொட்டி எங்களுக்கு ஒரு ஆளமான ஆன்மீக, மேய்ப்புப்பணி சார்ந்த அர்ப்பணத்திற்கான அழைப்புண்டு என்று சுட்டிக் காட்டுகிறார். ஆனால் இந்த ஜூபிலியும் மற்ற ஜூபிலிகளைப்போல வந்து போனாலும் வாரா வாரம் கொண்டாடப்படும் 'ஞாயிறு தினம்' திருச்சபையின் இறுதிக்கால ஞாயிறு தினத்தை நோக்கிய திருயாத்திரைக்கு உருக்கொடுத்துக் கொண்டேயிருக்கும்.

திருத்தந்தை தொடர்ந்து ஆயர்களும், குருக்களும், இறைமக்களுடன் சேர்ந்து இஞ் ஞாயிறு தினத்தின் புனிதத்துவத்தைப் பேணி அதற்கேற்ப வாழும்படி அழைப்பு விடுக்கின்றார். அப்போதுதான் மூன்றாம் ஆயிரமாம் ஆண்டில் மனிதகுலம் முழுவதும் உயிர்த்த யேசுவை அறிந்துகொள்ளும். கிறிஸ்துவின் சீடர்கள் தமது புதுப்பித் வாராந்த உயிர்ப்பு விழாக் கொண்டாட்டத்தின் வழியாக நம்பத் தகுந்த விதத்தில் மீட்பின் நற்செய்தியை எல்லோருக்கும் அறிவித்து ஒரு அன்புச் சமூகத்தைக் கட்டியெழுப்புவர்.

உங்கள் அனைவருக்கும் எனது ஆசீர்.

வத்திக்கான். 31 மே (பெந்தக்கோஸ்தே திருநாள்) 1998. நான் பாப்பரசராகி 20 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

2ஆம் அருள் சின்னப்பர்

❋ ❋ ❋

**மாபெரும் யூபிலி ஆண்டு 2000 இறைவன் திருச்சபையின் மீது வரச்செய்யும் ஒரு புது வசந்தம். இது கிறிஸ்தவ வாழ்வை புதுப்பிக்கும் தன்மை கொண்டது.**

**யூபிலியின் பலன்களைப் பெற்று திருச்சபை மறுமலர்ச்சிகாண இணைந்து செயல்படுவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYNOPSIS

## The Spirituality of the laity

Mr. S. Antonipillai

The spirituality of the laity is quite evident in the Bible right from the time of Patriarchs. Abraham, Moses, Joseph and the prophets were clear examples of deep faith in God' They were men of obedience to God ever ready to fulfil God's plan.

The New Testament shows us a way of spirituality entirely based on the love of neighbour. Spirituality must lead to action. Service to the poor and the marginalized flows from a deep spirituality.

There are a lot of obstacles in our concrete life situations for growth in spirituality. We cannot escape from our daily responsibilities. We should realize our call as christians and respond faithfully. Spirituality cannot be separated from life. Fulfilment of our ordinary duties and obligations in the spirit of faith expresses the depth of our spirituality.

We must know ourselves in order to grow in spirituality Our minds should be purified and we must enjoy inner peace. Daily meditation is necessary to become intimately united with God. Yoga discipline and meditation is an easy way to deepen our spirituality.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Urgent need for the formation of conscience

**Fr. M. David**

There is a lack of moral sensitivity with regard to the many images of violence which our society face today. It is through the formation of our conscience according to the values of the gospel we can become morally sensitive to the problems around us.

The Freudian school of psychology points out that we have three structures to our personality i.e. ID, EGO, Super - Ego. Among children, Super - Ego is primitive but necessary stage on the way to genuine conscience. If the transition from Super - Ego to moral conscience dose not happen in the proper time in the development of the child to adulthood, there can be very many pathological effects in the person.

The formation of conscience doesn't merley mean providing the person with moral principles. It is done more by character formation. This formation is based on the basic vision of life. This vision is a community achivement. Hence ultimately the formation of conscience is a community endeavour. The community is responsible in providing the individual with proper images and values in forming the conscience especially in counter - acting the false images and values prevalent in the society.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Bible in the Church

**Rev. Fr. Michael Savundranayagam**

"All Scripture is inspired of God..." ( 2 Tim. 3:16a ). The New Testament expressions "the Scripture" and "The Scriptures" are Jewish in origin. More than three fourths of the Old Testament used by Catholics is identical with the sacred scriptures of the Jews. It is beyond and doubt that the church from the time of the Apostles consisted of both Jews and non - Jews. The 27 books of the New Testament came to be vitally within the Church.

The process of writing of the books of the Old testament took about a thousand years. The destruction of the Temple of Jerusalem by the Romans in 70 A. D. and the rise of Christianity prompted to a great extent the final fixing of the Jewish canon during the second century A. D. Almost all the 27 books of the New Testament were written between 50 and 100 A.D. Though there was a New Testament consisting of about 20 books around the year 200, a complete New Testament of 27 books was not fixed until about the year 400 A. D. In 1546 the Council of Trent published the authoritative list of the books of the whole Bible.

Just as Israel in its pilgrimage in the desert came to be called "church" so too the new people gathered together by the preaching of the Gospel can rightly be called the church of the New Testament.

The modern reader in order to understand the words and deeds of which the Bible speaks has to project himself back almost 2000 to 3000 years. This process is not always easy. Sacred Scripture has come to be as a result of various dialogues within communities of believers conditioned by various contexts in varied periods of history. In this regard the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Historical-critical method" for the study of the Bible has proved its worth as an acceptable scientific method. It aims at determining in a diachronic manner the meaning that the biblical authors and editors tried to express.

When attempting to interpret Scripture one must seriously consider the progressive clarification the people experienced in the revelation they received as a community. In other words one must respect the tradition of faith within which the books of the bible came to be. It follows that the right interpretation of Scripture takes place in the heart of the church within its tradition of faith.

---





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூபிலி ஆண்டு

# 1999



"எழுந்து

என்

தந்தையிடம்

செல்வேன்......"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org